
தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 282 ஆடி 04
TN-TVL/25/2012-2014
நெல்லை, ஞாயிறு, ஜூலை 20, 2025
சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## இந்தியா-பாக். மோதலின்போது 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன: அதிபர் ட்ரம்ப்

...2-ம் பக்கம்

## உற்பத்தியில் தன்னிறைவு பெறும் வரை 'மேக் இன் இந்தியா' வெறும் பேச்சாகவே இருக்கும்: ராகுல் காந்தி

...3-ம் பக்கம்

## வங்கதேசம் செல்ல பி.சி.சி.ஐ. மறுப்பு? ஆசிய கோப்பை தொடர் நடைபெறுவதில் சிக்கல்

...6-ம் பக்கம்



● சென்னை கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள தனது சகோதரர் மு.க.முத்து வயது மூப்பின் காரணமாக காலமானதையொட்டி நேற்று அவரது உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### பணிநிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை பரிசீலிப்பதாக உறுதி:

# பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டம் திடீர் வாபஸ்

### தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை

தஞ்சாவூர், ஜூலை 20-

**பணிநிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை பரிசீலிப்பதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்ததை அடுத்து பகுதி நேர ஆசிரியர்களின் போராட்டம் திடீரென நேற்று வாபஸ் பெறப்பட்டுள்ளது.**

**தொகுப்பூதியமாக...**

அரசு பள்ளிகளில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள் கடந்த 2012-ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றனர். வாரத்தில் 3 நாட்கள் பணிபுரியும் அவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.12,500 வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களை பணிநிரந்தரம் செய்ய கோரி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் பகுதிநேர சிறப்பு ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவர் எனத் தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

**தொடர் போராட்டம்...**

அந்த வகையில், தி.மு.க. 2021-ம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றது முதல், பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள் தங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு வடிவங்களில் அடிக்கடி போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், நுங்கம்பாக்கம் டி.பி.ஐ. வளாகம் அருகே பகுதிநேர சிறப்பு ஆசிரியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவினர் கடந்த 8-ம் தேதி தொடங்கி காலவரையற்ற போராட்டம் நடத்தி வருகின்றனர். தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என ஆசிரியர்கள் தெரிவித்திருந்தனர்.

**பரிசீலனை செய்ய...**

இந்த நிலையில், இது தொடர்பாக தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ், "பகுதி நேர ஆசிரியர்கள் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களிடம் அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தையின்போது அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அந்த கோரிக்கைகள் தமிழக முதல்-அமைச்சரிடம் கொண்டு செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும். விரைவில் பகுதி நேர ஆசிரியர்களுக்கு நல்ல செய்தி வரும் என நம்புகிறோம்" என்று தெரிவித்தார்.

**போராட்டம் வாபஸ்...**

இந்நிலையில் பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பரிசீலைனை செய்யப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்த நிலையில் பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டம் நேற்று மாலை தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மூத்த மகன்

# நடிகர் மு.க.முத்து காலமானார்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை, ஜூலை 20-

**என் மீது எப்போதும் பாசத்துடன் இருந்து, எனது வளர்ச்சியைத் தன் வளர்ச்சியாகக் கருதி, எப்போதும் என்னை ஊக்கப்படுத்தி வந்தவர் அண்ணன் மு.க.முத்து. தாய் - தந்தையர்க்கு இணையாக என் மீது பாசம் காட்டிய என் ஆருயிர் அண்ணனுக்கு அன்பு உணர்வுடன் எனது அஞ்சலியை நான் செலுத்துகிறேன் என்று மு.க.முத்து மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.**

தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்து உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 77. முன்னாள் முதல்வர் கருணாநிதி - பத்மாவதி தம்பதிக்கு 1948-ம் ஆண்டு மகனாக பிறந்த மு.க.முத்து 1970-களில் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானார்.

'பிள்ளையோ பிள்ளை', 'சமையல்காரன்', 'அணையா விளக்கு', 'இங்கேயும் மனிதர்கள்' 'பூக்காரி' உள்ளிட்ட படங்களில் நடித்தார். தான் நடித்த படங்களில் சில பாடல்களையும் பாடியிருக்கிறார். திமுக மேடைகளிலும் கட்சியின் கொள்கை விளக்க



பாடல்களை பாடியுள்ளார்.

எம்.ஜி.ஆருக்கு போட்டியாக சினிமாவில் களமிறக்கப்பட்டவர் என்ற பொதுவான கருத்து நிலவினாலும், மு.க.முத்து நடித்த 'பிள்ளையோ பிள்ளை' படத்தின் படப்பிடிப்புக்கு வந்து கிளாப் அடித்து எம்.ஜி.ஆர் படப்பிடிப்பை தொடங்கி வைத்தார். கடந்த 2006-ஆம் ஆண்டு தேவா இசையில் 'மாட்டுத் தாவணி' என்ற படத்தில் ஒரு பாடல் பாடியிருந்தார் மு.க.முத்து.

இந்த நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மு.க.முத்து சிகிச்சை பலனின்றி நேற்று (ஜூலை 19) காலமானார். அவரது உடல் ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. மு.க.முத்துவின் மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். மு.க.முத்துவின் மறைவையொட்டி முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கவிருந்த அரசு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், "எங்கள் குடும்பத்தின் மூத்த பிள்ளை, என்னுயிர் அண்ணன் மு.க.முத்து மறைவுற்றார் என்ற செய்தி நேற்று காலையில் என்னை இடியெனத் தாக்கியது. தாய் - தந்தையர்க்கு இணையாக என் மீது பாசம் காட்டிய அன்பு அண்ணனை இழந்து விட்டேன் என்ற துயரம் என்னை வதைக்கிறது. தந்தை முத்துவேலர் நினைவாக அண்ணனுக்கு மு.க.முத்து என்று பெயர் சூட்டப்பட்டது. தலைவர் கலைஞரைப் போலவே இளமைக் காலம் முதல் நாடகங்களின் மூலமாகத் திராவிட இயக்கத்துக்கு தொண்டாற்றத் தொடங்கியவர் அண்ணன்.

நடிப்பிலும், வசன உச்சரிப்பிலும், உடல் மொழியிலும் தனக்கெனத் தனிப்பாணியை வைத்திருந்தார். அத்தகைய ஆற்றல், ஆர்வம் காரணமாக திரைத்துறையில் 1970-ஆம் ஆண்டில் நுழைந்தார். அறிமுகமான முதல் திரைப்படத்திலேயே இரட்டை வேடத்தில் நடித்தார். பிள்ளையோ பிள்ளை, பூக்காரி, சமையல்காரன், அணையா விளக்கு ஆகிய படங்களின் மூலமாகத் தமிழ்நாட்டு ரசிகர் மனதில் நிரந்தரமாகக் குடியேறினார்.

பல நடிகர்களுக்கு வாய்க்காத சிறப்பு அவருக்கு இருந்தது. தனது சொந்தக் குரலில் பாடல்களை இனிமையாகப் பாடும் திறனைப் பெற்றிருந்தார். 'நல்ல மனதில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா' என்ற பாடலும், 'சொந்தக்காரங்க எனக்கு ரொம்ப பேருங்க' என்ற பாடலும் பலராலும் இன்றும் மறக்க முடியாத பாடல் ஆகும்.

என் மீது எப்போதும் பாசத்துடன் இருந்து, எனது வளர்ச்சியைத் தன் வளர்ச்சியாகக் கருதி, எப்போதும் என்னை ஊக்கப்படுத்தி வந்தவர் அவர். எப்போது அவரைப் பார்க்கச் சென்றாலும், பாசத்துடன் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். வயது மூப்பின் காரணமாக அவர் மறைவுற்றாலும் அன்பால் எங்கள் மனதிலும், கலையாலும் பாடல்களாலும் மக்கள் மனதிலும் என்றும் வாழ்வார். என் ஆருயிர் அண்ணனுக்கு அன்பு உணர்வுடன் எனது அஞ்சலியை நான் செலுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

### 3 நாட்கள் அரசு முறை பயணமாக வரும் 23-ம் தேதி

# பிரிட்டன், மாலத்தீவு நாடுகளுக்கு செல்கிறார் பிரதமர் நரேந்திரமோடி

புதுடெல்லி, ஜூலை 20-

**பிரதமர் மோடி வரும் 23-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை பிரிட்டன், மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மெற்கொள்கிறார்.**

பிரிட்டன் மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். டெல்லியில் இருந்து வரும் 23ம் தேதி பிரிட்டன் செல்லும் பிரதமர் மோடி, பிரிட்டனுடன் முக்கிய வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என எதிபார்க்கப்படுகிறது. இந்த வர்த்தக ஒப்பந்தம் மூலம், இந்திய இறக்குமதி பொருட்களுக்கு பிரிட்டன் வரியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல, பிரிட்டன் நாட்டின் விஸ்கி, கார்கள் உள்ளிட்டவைகளை இந்தியாவில் விற்பனை செய்வதை எளிதாக்கும் அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இருக்கலாம் எனத்தெரிகிறது.

பிரிட்டன் பயணத்தை முடித்து விட்டு, பிரதமர் 25, 26ம் தேதிகளில் மாலத்தீவுக்குப் பயணம் மேற்கொள்வார். அங்கு அவர் 60வது தேசிய தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். மாலத்தீவு - இந்தியா இடையேயான உறவில் சமீப காலமாக கசப்புணர்வுகள் அதிகரித்த நிலையில், பிரதமர் மோடியின் இந்த பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பிரதமர் மோடி தனது பயணத்தின் போது மாலத்தீவு அதிபர் முகம்மது முய்சு உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

# தமிழ்நாட்டில் 3 நட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு

### வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜூலை 20-

**தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வரும் 22ம் தேதி வரை கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னையில் கடந்த சில நாட்களாக வெயில், மழை என சீதோஷண நிலை இருந்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் காலை வரை பல்வேறு இடங்களில் மழை பெய்தது. குறிப்பாக பெரம்பூர், புரசைவாக்கம், அண்ணா நகர், கோயம்பேடு, வடபழனி, கோடம்பாக்கம், தேனாம்பேட்டை, மயிலாப்பூர், அண்ணா சாலை, சைதாப்பேட்டை, கிண்டி, வேளச்சேரி, ஓஎம்ஆர் சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழை பெய்தது. இதனால் சாலையில் மழைநீர் தேங்கியது. அதனை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றி வருகின்றனர். மேலும் தமிழகத்தில் வரும் 22ம் தேதி வரை கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தெற்கு ஆந்திரா மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமுதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. தொடர்ந்து 22ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் கனமழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காவலாளி அஜித்குமார் கொலை வழக்கு:

# சி.பி.ஐ. விசாரணை தீவிரம்

சிவகங்கை, ஜூலை 20-

**அஜித்குமார் கொலை வழக்கில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். சி.சி.டிவி. காட்சிகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் கோவிலில் காவலாளியாக வேலை பார்த்து வந்தவர், அஜித்குமார் (வயது 29). பேராசிரியை நிகிதா என்பவர் தனது நகை மாயமானதாக அளித்த புகாரின் பேரில் மானாமதுரை தனிப்படை போலீசார் அஜித்குமாரை கொடூரமாக தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தனிப்படை போலீஸ்காரர்கள் கண்ணன், பிரபு, ஆனந்த், ராஜா, சங்கரமணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையே இந்த வழக்கானது, சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. அதன்பேரில், மடப்புரம் கோவில் அலுவலகம், அஜித்குமார் தாக்கப்பட்டபோது வீடியோ எடுக்கப்பட்ட இடம், வணிக வளாகம் உள்ளிட்ட இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் கோவில் அதிகாரியின் டிரைவர் கார்த்திவேல், அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமார், ஆட்டோ டிரைவர் அருண்குமார், அஜித்குமாருடன் வேலை பார்த்து வந்த வினோத்குமார் மற்றும் பிரவீன் ஆகிய 5 பேரிடம் மதுரை ஆத்திகுளத்தில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் வைத்து சி.பி.ஐ. அதிகாரிகள் தனித்தனியாக விசாரணை நடத்தினர். சம்பவம் நடந்த தினத்தில் நடந்தது என்ன, போலீசார் எவ்வாறு நடந்து கொண்டார்கள், கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில், அஜித்குமார் கொலை வழக்கில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். மடப்புரம் கோவிலுக்கு விளக்கு விற்பனை செய்யும் அழகுப் பெண் என்பவரின் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். மதுரை-ராமேஸ்வரம் சாலையில் உள்ள தனியார் பேக்கரி கடையில் உள்ள சிசிடிவியை சி.பி.ஐ. ஆய்வு செய்தனர். அஜித்குமார் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். வீட்டின் அருகே பதிவான சி.சி.டிவி. காட்சிகளையும் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

### ஆகஸ்ட் 3-ம் தேதி நடைபெறவுள்ள

# முதுகலை மருத்துவ 'நீட்' தேர்வு: முக்கிய அறிவிப்புகள் வெளியீடு

புதுடில்லி, ஜூலை 20-


**முதுநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் முதுகலை 2025 தேர்வு அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 3-ம் தேதி நடைபெற இருக்கிறது. இந்த நிலையில் மருத்துவ அறிவியல் தேசிய தேர்வு வாரியம் (NBEMS) முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.**

தேர்வு எழுதுபவர்கள் தங்களுக்கு எந்த இடத்தில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தகவல் இ-மெயில் மூலம் வருகிற 21ஆம் தேதி அனுப்பப்படும். விண்ணப்பத்தாரர்கள் தேர்வு நடைபெறும் இடத்தை மாற்றுவதற்கு ஜூன் 13ஆம் தேதி முதல் ஜூன் 17ஆம் தேதி வரை அனுமதி வழங்கப்பட்டது.

ஹால் டிக்கெட் ஜூலை 31ஆம் தேதி வழங்கப்படும். அதில் தேர்வு எழுதக்கூடிய மையம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அதில் தெரிந்து கொள்ளலாம். ஏதாவது சந்தேகம் இருந்தால் காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை +91-7996165333 உதவி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பாணை natboard.edu.in and nbe.edu.in ஆகிய இரண்டு இணைய தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நீட் தேர்வு காலை 9 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறும். தேர்வு முடிவு செப்டம்பர் 3ஆம் தேதி வெளியிடப்படும்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -501.51 | -143.05 |
| பாயின்ட் 81,757.73 | பாயின்ட் 24,968.40 |




**தங்கம்**
1 சவரன் ₹73,360
1 கிராம் ₹9,170



**வெள்ளி**
1 கிலோ ₹126,000
1 கிராம் ₹126.00

**டாலர்** ₹86.19

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# இந்தியா – பாகிஸ்தான் மோதலின் போது சுட்டு வீழ்த்தப்பட்ட 5 ஜெட் விமானங்கள்

## அதிபர் ட்ரம்ப் கருத்தால் பரபரப்பு

**வாஷிங்டன், ஜூலை 20-**

இந்தியா - பாக். மோதலின் போது 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சியைச் சேர்ந்த செனட் உறுப்பினர்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த இரவு விருந்தின் போது பேசிய டொனால்ட் ட்ரம்ப், "இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அப்போது, போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 4 அல்லது 5 விமானங்கள் வீழ்த்தப்பட்டன. ஆனால், 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என நினைக்கிறேன். ஏனெனில், நிலைமை தொடர்ந்து மோசமாகிக் கொண்டே இருந்தது. இல்லையா?



இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையை நிறுத்திக் கொள்வதில் முன்னும் பின்னுமாக இருந்தன. அது பெரிதாகிக்கொண்டே இருந்தது. வர்த்தகத்தின் மூலம் நாங்கள் அதை முடிவுக்குக்கொண்டு வந்தோம். அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய விரும்புகிறீர்கள். நீங்கள் ஆயுதங்களைக் கொண்டு தாக்கிக் கொள்வீர்கள் எனில், குறிப்பாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவீர்கள் எனில் உங்களுடன் நாங்கள் வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபட மாட்டோம் என கூறினேன். ஏனெனில், இரண்டு நாடுகளுமே சக்திவாய்ந்த அணுஆயுத நாடுகள்.

8 ஆண்டுகளில் எந்த அமெரிக்க நிர்வாகமும் சாதிக்க முடியாததை ஆறு மாதங்களில் நாங்கள் சாதித்துள்ளோம். இதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நாங்கள் நிறைய போர்களை நிறுத்தி உள்ளோம். இவை கடுமையான போர்கள்" என தெரிவித்தார்.

அந்த 5 ஜெட் விமானங்கள் எந்த நாட்டுக்குச் சொந்தமானவை என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. அமெரிக்கா சுட்டு வீழ்த்திய 5 ஜெட் விமானங்களால் ஏதேனும் ஒரு நாடு பாதிக்கப்பட்டதா அல்லது இரண்டு நாடுகளுமே பாதிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

# காஷ்மீர், பஹல்காம் தாக்குதல்: பாகிஸ்தான் மீண்டும் விளக்கம்

**இஸ்லாமாபாத், ஜூலை 20-**

பஹல்காம் தாக்குதலுக்கு காரணமான பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு இயங்கும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான டிஆர்எப் பிரிவை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பு என அமெரிக்க அறிவித்தது அமெரிக்க அரசு. இதனை இந்தியா வரவேற்றது. இதற்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு பகிர்ந்துள்ள தகவல் குறித்து பார்ப்போம். "பஹல்காம் தாக்குதலுக்கும் லஷ்கர்-இ-தொய்பாவிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அந்த அமைப்பு பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட மற்றும் செயலிழந்த அமைப்பு ஆகும். அந்த பணியை பாகிஸ்தான் அரசு கவனமாக செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைப்பின் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், அதன் உறுப்பினர்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் தீவிரவாதத்தை எதிர்க்கின்ற நாடுகளில் உலகளவில் முன்னணியில் உள்ளது. உலக அமைதிக்காக தீவிரவாத தடுப்பு நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலில் லஷ்கருக்கு பங்கு உள்ளதாக சொல்லும் இந்தியாவிடம் ஆதாரம் ஏதுமில்லை. உலக அளவில் பாகிஸ்தானுக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் இந்தியா செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் வசித்து வரும் மக்களின் வாழ்வியல் நிலை சார்ந்த கவனத்தை இந்தியா திசை திருப்ப பார்க்கிறது" என கூறியுள்ளது.

## நடிகர் மு.க.முத்து மறைவு:

# எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் இரங்கல்

**சென்னை, ஜூலை 20-**

மு.க.முத்து மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் பத்மாவதி தம்பதியருக்கு மூத்த மகனாக பிறந்தவர் மு.க. முத்து. இந்நிலையில், கடந்த சில நாட்களாக கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்த அவர், நேற்று காலை 8 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 77.

இந்நிலையில், தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, வெளியிட்டு உள்ள இரங்கல் செய்தியில், அன்பு சகோதரர் மு.க. முத்துவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என தெரிவித்து உள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ: தொடக்க காலத்தில் தி.மு.கழக மேடைகளில் கழக கொள்கை விளக்கப் பாடல்களை பாடியும், தேர்தல் களத்தில் சிறப்பாக பிரச்சாரம் செய்தும் தி.மு.கழக வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்றார். இவரது மறைவால் துயரம் அடைந்திருக்கக் கூடிய குடும்ப உறவுகளுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா.ம.க. தலைவர் அன்புமணி: மு.க. முத்துவை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள், தி.மு.க.வினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர்: மு.க. முத்து திரைத்துறை ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து இருந்தார். மிகவும் அமைதியானவர், பழகுவதற்கு இனியவர். அன்னாரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை: மு.க. முத்து தமிழ்நாட்டின் கலையுலகிலும் அரசியல் வரலாற்றிலும் தனக்கென தனி இடம் பதித்தவர். தந்தையின் அரசியல் பாரம்பரியத்தையும், சமூக அக்கறையையும் தொடர்ந்து அவர் எடுத்துச் சென்றதோடு, திரைப்படங்களின் மூலமாகவும், பொதுவாழ்வின் மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

அவரது மறைவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# அரசியலை ஒருபோதும் விரும்பவில்லை: எலான்

**நியூயார்க், ஜூலை 20-**

அரசியலை ஒருபோதும் விரும்பவில்லை ஆனால் வேறு வழியில்லாமல் கட்சித் தொடங்கினேன் என எலான் மஸ்க் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் பிரபல தொழிலதிபரான எலான் மஸ்க், அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து 'அமெரிக்கா கட்சி' எனும் அரசியல் கட்சியைத் தொடங்குவதாக ஜூலை முதல் வாரத்தில் அறிவித்தார்.

இந்த நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய எலான் மஸ்க், எனக்கு அரசியலில் நுழைவது என்பதில் சற்றும் விருப்பமில்லை. நான் ராக்கெட் தயாரிக்கிறேன், கார்களை, கருவிகளை உருவாக்குகிறேன். ஆனால், தேர்தல் பிரசார வசனங்களை அல்ல. என் நிறுவனம் தயாரிக்கும் பொருள்களை மக்கள் பயன்படுத்துவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். அதைத் தவிர வேறு எனக்கு எதிலும் ஆர்வமமில்லை. ஆனால், எப்போது, இந்த நாட்டின் அமைப்பு மிக மோசமாக உடைந்து போயிருக்கிறதோ, அப்போது என்னால் அமைதியாக இருக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்துக்கு மோசமான ஆபத்துகள் காத்திருக்கும் என்பதால் வேறு வழியின்றி, அரசியல் கட்சித் தொடங்குவது என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறேன் என்று பேசியிருக்கிறார்.

அவர் சிரித்தபடி, மிக சாதாரண உடல் அசைவுகளுடன் மக்களிடையே பேசும் விடியோவையும் அமெரிக்கா கட்சியின் எக்ஸ் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதில் வழக்கத்துக்கு நேர்மாறாக ஒரு மஞ்சள் நிற துண்டை எலான் மஸ்க் அணிந்திருப்பது, நம்ம ஊர் மக்களிடையே பேசுபொருளாகியிருக்கிறது. இந்திய அரசியல்வாதிகள் போல தோளில் துண்டுபோட்டிருப்பதாக பலரும் அந்த விடியோவில் கருத்துகளை பதிவு செய்திருக்கிறார்கள்.

# இந்திய விமானங்களுக்கான வான்வெளி தடையை ஆக.25 வரை மேலும் நீட்டித்தது பாகிஸ்தான்

**இஸ்லாமாபாத், ஜூலை 20-**

இந்திய விமானங்களுக்கான வான்வெளி தடை வரும் ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதி காலை 5.19 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் விமான போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பதிலாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை இந்தியப் படைகள் துல்லியமாக தாக்கி அழித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் போர் சூளும் அபாயம் ஏற்பட்டது. அப்போது இந்தியாவுக்கு சொந்தமான அல்லது குத்தகைக்கு விடப்பட்ட விமானங்கள், ராணுவ விமானங்கள், பொது போக்குவரத்து விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த அந்நாட்டு அரசு தடைவிதித்தது.

இந்த நிலையில் தடை ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி காலை 5.19 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் விமான போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது. வருகிற 24-ம் தேதி வரை அனைத்து பாகிஸ்தான் விமானங்களும் இந்தியாவின் வான்வெளியை பயன்படுத்த மத்திய அரசு தடைவிதித்துள்ளது. ஏப்ரல் 30-ம் தேதி இந்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது. பாகிஸ்தான் ஏப்ரல் 24-ம் தேதி அவர்களின் வான்வெளியை பயன்படுத் தடைவிதித்தது.

# மு.க.முத்து வாழ்க்கை வரலாறு



தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மூத்த மகனும் நடிகருமான மு.க.முத்து காலமானார். உடல்நலைக் குறைவால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கருணாநிதியின் முதல் மனைவியான பத்மாவதி, மகன் மு.க.முத்து பிறந்த சில மணி நேரங்களிலேயே உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். தாயின் அரவணைப்பின்றி பாட்டியிடம் வளர்ந்த மு.க.முத்து இளம் வயதிலேயே தந்தையுடன் கட்சி மேடைகளிலும் பங்கேற்பார். கட்சி கொள்கை விளக்க பாடல்களையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பாடியுள்ளார்.

எம்.ஜி.ஆர். அரசியலிலும் சினிமாவிலும் ஜொலித்துக் கொண்டிருந்த 70களில் அவருக்குப் போட்டியாக மு.க.முத்துவை அவரது தந்தை கருணாநிதி களமிறக்கியதாக சொல்லப்படுவதுண்டு. தன்னுடைய நடை, உடை, பாவனை, மேக்கப் போன்ற அனைத்தையும் எம்.ஜி.ஆரைப் போலவே அமைத்துக் கொண்டார் மு.க.முத்து. 'பூக்காரி' தொடங்கி 'பிள்ளையோ பிள்ளை', 'சமையல்காரன்', 'அணையாவிளக்கு', 'இங்கேயும் மனிதர்கள்' என தான் நடித்த படங்கள் அனைத்திலும் எம்.ஜி.ஆரின் பார்முலாவை பின்பற்றியே நடித்தார்.

ஆனால் இந்த படங்கள் சொல்லிக் கொள்ளும்படியான வரவேற்பை பெறவில்லை. எனினும் இவற்றில் இடம்பெற்ற 'காதலின் பொன் வீதியில்', 'எந்தன் மனதில் குடி இருக்கும் நாகூர் ஆண்டவா' போன்ற பாடல்கள் பரவலாக கொண்டாடப்பட்டன. தனது படங்களில் சில பாடல்களையும் சொந்தக் குரலில் பாடியுள்ளார் மு.க.முத்து. முதலமைச்சரின் மகன் என்ற செல்வாக்கு இருந்தும் கூட அவரால் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தை பிடிக்க முடியாமல் போனது. அரசியலில் அவரால் சோபிக்க முடியவில்லை.

ஒருமுறை எம்ஜிஆர் முதல்வராக இருந்த காலகட்டத்தில் கருணாநிதியிடம் கோபித்துக் கொண்டு ராமாவரம் தோட்டத்துக்குச் மு.க.முத்து சென்றுவிட்டதாக சொல்லப்படுவதுண்டு. பிறகு எம்.ஜி.ஆர் அவரை சமாதானம் செய்து 'அப்பாவிடன் நான் பேசுகிறேன்' என்று அனுப்பி வைத்தாராம். என்னதான் எம்.ஜி.ஆருக்கு போட்டியாக சினிமாவில் இறக்கிவிடப்பட்டவர் என்ற கருத்து நிலவினாலும் மு.க.முத்து நடித்த 'பிள்ளையோ பிள்ளை' பட ஷூட்டிங் நடக்கும் இடத்துக்கே வந்து 'ஆக்ஷன்' சொல்லி கிளாப் அடித்து படப்பிடிப்பை தொடங்கி வைத்திருக்கிறார் எம்ஜிஆர். மேலும் மு.க.முத்துவுக்கு விலை உயர்ந்த ரோலக்ஸ் வாட்ச் ஒன்றையும் பரிசாக கொடுத்திருக்கிறார்.

அரசியல் மோதல்களுக்கு நடுவே மு.க.முத்து அலைக்கழிக்கப் பட்ட போது 'பாவம் அவன் இளந்தளிர். அவனை விட்டு விடுங்கள்' என்று கருணாநிதி சொன்னதாக கூறப்படுவதுண்டு. தந்தையுடன் ஏற்பட்ட பிணக்கு காரணமாக தனியாக பிரிந்து சென்ற மு.க.முத்து பல ஆண்டுகள் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி வறுமையில் கஷ்டப்பட்டார். கருணாநிதியின் மற்றொரு மகனாக மு.க.தமிழரசுவின் திருமணத்தில் கூட அவர் கலந்து கொள்ளவில்லை. மு.க.முத்துவின் நிலையை அறிந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவருக்கு ரூ.5 லட்சம் நிதியுதவி அளித்த நிகழ்வு அப்போது பரபரப்பாக பேசப்பட்டது. மு.க.முத்துவுக்கு சிவகாம சுந்தரி என்ற மனைவியும் அறிவுநிதி என்ற மகனும், தேன்மொழி என்ற மகளும் உண்டு.

பல ஆண்டுகளுக்குப் பிறகு 2009-ல் தான் தன் தந்தை கருணாநிதியுடன் சமாதானம் ஆகி ஒன்று சேர்ந்தார் மு.க.முத்து. சினிமாவிலிருந்து பொதுவாழ்க்கையிலிருந்து பல ஆண்டுகாலம் விலகியிருந்த மு.க.முத்து கடந்த 2008ஆம் ஆண்டு தேவா இசையில் 'மாட்டுத் தாவணி' என்ற படத்தில் ஒரு பாடலை பாடியிருந்தார். 2018ஆம் ஆண்டு கருணாநிதி மறைந்தபோது அவரது இறுதிச் சடங்கில் மு.க.முத்து கலந்து கொள்ளவில்லை. மாறாக அடுத்த நாள் தந்தை அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு மெலிந்த உடலுடன் இருவர் உதவியுடன் நடந்து வந்து அஞ்சலி செலுத்தினார். கடந்த 2023ஆம் ஆண்டு மு.க.முத்து கடும் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின் தேறினார். இந்த நிலையில் நீண்டநாட்களாகவே உடல்நிலை மோசமாகி இருந்த மு.க.முத்து நேற்று காலமானார்.

## நைஜர் நாட்டில் பயங்கரவாதிகள் தாக்குல்:

# இந்தியர்கள் 2 பேர் உயிரிழப்பு

**நியாமி, ஜூலை 20-**

மேற்கு ஆப்பிரிக்கா நாடான நைஜரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் இரண்டு இந்தியர்கள் கொல்லப்பட்டனர், ஒருவர் கடத்தப்பட்டார் என்று அந்த நாட்டின் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

நைஜர் நாட்டின் தலைநகர் நியாமியில் இருந்து சுமார் 130 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தென்மேற்கு நகரமான டோசோவில் ஒரு கட்டுமானத் தளத்தில் காவலுக்கு இருந்த ராணுவத்தினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 2 இந்தியர்கள் கொல்லப்பட்டனர், ஒருவர் கடத்தப்பட்டார்.

"ஜூலை 15 அன்று நைஜரின் டோசோ பகுதியில் நடந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில், இரண்டு இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர், ஒருவர் கடத்தப்பட்டார்." என்று அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களின் உடல்களை இந்தியாவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருவதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேபோல, கடத்தப்பட்ட இந்தியரை பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், நைஜர் நாட்டில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக எச்சரிக்கையுடன் இருக்குமாறும் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

**20-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார், சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**ரிஷபம்:-** வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது சுகம். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். வீண் செலவுகளை குறைக்க புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும்.

**மிதுனம்:-** பெண்களால் ஆதாயம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து உபசாரம் செய்து மகிழ்வார்கள். வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும். அரசு பணியில் உள்ளவர்கள் பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்.

**கடகம்:-** தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் ஓங்கும். அனைத்து செயல்பாடுகளும் அனுகூலமாய் அமையும். திருப்திகரமான தீர்த்த யாத்திரைகள் மகிழ்வு தரும். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும்.

**சிம்மம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள்.

**கன்னி:-** நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் குழப்பம் ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பழகுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் சாதகமான சூழல் உருவாகும்.

**துலாம்:-** பாக்கிய விருத்தி ஏற்படும். எல்லா விதத்திலும் பூரண சுகம் கிடைக்கும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**தனுசு:-** கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை.

**மகரம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். எதிலும் துணிந்து இறங்க ஏற்றம் வரும். முயற்சியைக் கைவிடாது, முன்னேற முயன்றால் வெற்றி உங்கள் பக்கம்.

**கும்பம்:-** எடுத்த காரியங்கள் அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**மீனம்:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் சுமுகமாக இருத்தல் அவசியம். கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. வண்டி, வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

# இஸ்ரேல் ராணுவம் தாக்குதல்: காஸாவில் உணவுக்காக காத்திருந்த 50 பேர் பலி



**காஸா, ஜூலை 20-**

பாலஸ்தீனத்தில் காஸா பகுதியில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023 அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலில் திடீர் தாக்குதல் நடத்தி அங்குள்ள 251 பேரைப் பணயக் கைதிகளாக கைது செய்ததில் இருந்து அங்கு போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 57,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று (ஜூலை 19) காஸாவில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் உணவு மையங்களுக்கு அருகில் உணவுக்காகக் காத்திருந்த 32 பேரும் அடங்குவர். மேலும் 80-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த மே 27 முதல் இது வரை உணவுக்காக காத்திருந்த 800 பேர் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஐ.நா. தகவல் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்ட அமைப்பு, காஸாவில் ஆயிரக் கணக்கான மக்கள் பசியால் மடிந்துவிடும் பேரழிவில் உள்ளனர். 3ல் ஒருவர் பல நாள்கள் உணவின்றித் தவித்து வருவதாகக் கூறியுள்ளது. அதேபோல அங்கு இயங்கும் ஒரு சில மருத்துவமனைகளில்கூட போதிய மருந்துகள், எரிபொருள் இல்லை. இன்குபேட்டர் இன்றி பச்சிளம் குழந்தைகள் பலரும் உயிரிழந்து வருகின்றனர்.

இதனிடையே இஸ்ரேல் - காஸா இடையே போர்நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பிலும் அமெரிக்க அதிபர் டிரம்ப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. காஸாவில் இருந்து மேலும் 10 பணயக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்பட உள்ளதாக டிரம்ப் கூறியுள்ளார்.

முன்னதாக ஓரிரு வாரங்களில் இஸ்ரேல் - காஸா இடையே போர்நிறுத்தம் வரலாம் என்று டிரம்ப் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சூதாட்ட செயலி வழக்கில் ஆஜராக

# கூகுள், மெட்டா நிறுவனங்களுக்கு அமலாக்கத்துறை சம்மன்

**புதுடெல்லி,ஜூலை 20-**

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் விசாரணை வளையத்துக்குள் உள்ள சட்டவிரோத சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்துவதில் கூகுள், மெட்டா ஆகிய டிஜிட்டல் தளங்களின் பங்கு குறித்து அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது.

"கூகுள் மற்றும் மெட்டா தளங்கள், விளம்பரங்கள் மூலமாக சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்தி பயனர்களை சென்றடைய உதவுகின்றன" என்று அமலாக்கத் துறை தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது

சட்டவிரோத சூதாட்ட செயலிகளான வி மணி, விஎம் டிரேடிங், ஸ்டாண்டர்டு ட்ரேடர்ஸ் லிமிடட், ஐபுள் கேபிட்டல் லிமிட்டட், லோட்டஸ் புக், 11ஸ்டார்ஸ் மற்றும் கேம்பெட் லீக் ஆகிய நிறுவனங்களை அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது.

இந்த ஆன்லைன் சூதாட்ட செயலிகள் தொடர்பான வழக்கில் மும்பையில் நான்கு இடங்களில் சோதனை நடத்தி, கணக்கில் வராத ரூ.3.3 கோடி பணத்தையும், ஆடம்பர வாட்ச்கள், நகைகள், வெளிநாட்டு கரன்சிகள் மற்றும் சொகுசு வாகனங்களையும் அமலாக்கத் துறை சமீபத்தில் பறிமுதல் செய்தது.

முன்னதாக, சூதாட்ட செயலிக்கு விளம்பரம் செய்தது தொடர்பாக நடிகர்கள் பிரகாஷ் ராஜ், ராணா, விஜய் தேவரகொண்டா உட்பட 29 நடிகர், நடிகைகள், பிரபலங்கள், விளையாட்டு வீரர்களிடம் விசாரணை நடத்த அமலாக்கத் துறை முடிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

# 'மேக் இன் இந்தியா' வெறும் பேச்சாகவே இருக்கும்: ராகுல்

புதுடில்லி, ஜூலை 20-

உற்பத்தியில் தன்னிறைவு பெறும் வரை, வேலை வாய்ப்புகள், வளர்ச்சி மற்றும் 'மேக் இன் இந்தியா' பற்றிய பேச்சுகள் வெறும் பேச்சுக்களாகவே இருக்கும் என லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: இந்தியாவில் தயாரிக்கப்படும் பெரும்பாலான டிவிக்களின் 80 சதவீத உதிரிபாகங்கள் சீனாவில் இருந்து தான் வருகின்றன என்பது உங்களுக்கு தெரியுமா? மேக் இன் இந்தியா என்ற பெயரில், நாம் வெறும் பொருட்களை பொருத்த தான் செய்கிறோம். உண்மையில் தயாரிக்கப்படவில்லை. ஐபோன்கள் முதல் டிவிக்கள் வரை, பாகங்கள் வெளிநாட்டில் இருந்து தான் வருகின்றன. நாம் அவற்றை ஒன்றாக இணைக்கிறோம்.

சிறு தொழில்முனைவோர் உற்பத்தி செய்ய விரும்புகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஆதரவான கொள்கை இல்லை. மாறாக, கடுமையான வரிகளும், நாட்டின் தொழில்துறையை கைப்பற்றிய குறிப்பிட்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் ஏகபோகமும் மட்டுமே உள்ளது. உற்பத்தியில் தன்னிறைவு பெறும் வரை, வேலை வாய்ப்புகள், வளர்ச்சி மற்றும் ' மேக் இன் இந்தியா' பற்றிய பேச்சுகள் வெறும் பேச்சுக்களாகவே இருக்கும்.

எல்லையை தாண்டிய இந்தியா ஒரு உண்மையான உற்பத்தி மையமாக மாறுவதற்கும், சீனாவுடன் சமமாக போட்டியிடுவதற்கும் அடிமட்ட அளவில் மாற்றம் தேவை. இவ்வாறு அந்த அறிக்கையில் ராகுல் கூறியுள்ளார்.

# உ.பி.,யில் மினி வேன்-லாரி மோதி விபத்து: 6 பேர் பலி

லக்னோ, ஜூலை 20-

உத்தரபிரதேசத்தில் மினி வேன்- லாரி மோதி ஏற்பட்ட விபத்தில், 6 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

உத்தரபிரதேச மாநிலம், யமுனா விரைவு சாலையில் மினி வேன்- லாரி மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ''இந்த விபத்து அதிகாலை 3 மணியளவில் நிகழ்ந்துள்ளது. ஆக்ரா நோக்கி சென்ற மினி வேன் எதிரே வந்த லாரி மீது மோதியது தான் விபத்திற்கு காரணம் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. டிரைவர் தூங்கியதால் இந்த விபத்து நிகழ்ந்து இருக்கலாம். விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகிறோம்'' என எஸ்.எஸ்.பி., ஷலோக் குமார் தெரிவித்தார்.



நம்பியார் நகர் மீன் பிடித்துறைமுகத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டு மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

# 40 பி. டாலரை தாண்டிய ஏற்றுமதி: அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம்

ஐதராபாத், ஜூலை 20-

இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு 40 பில்லியன் டாலரை தாண்டியுள்ளது என மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஐ.ஐ.டி ஹைதராபாத்தின் 14-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய மத்திய ரயில்வே, தகவல் ஒளிபரப்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் வைஷ்ணவ், இந்தியாவில் மின்னணு பொருட்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் மிகச் சிறப்பாக உள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் உள்நாட்டு உற்பத்தி 6 மடங்கு அதிகரித்துள்ளது. அதே போல், ஏற்றுமதி 8 மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்றுமதி மதிப்பு 40 பில்லியன் டாலரை தாண்டியுள்ளது. இந்தியாவுக்கு இணையான நாடுகள் கண்டிராத வளர்ச்சி இது.

வணிக அளவில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் குறைக்கடத்தி சிப் இந்த ஆண்டு வெளிவரத் தொடங்கிவிடும். குறைக்கடத்தி சிப் தயாரிப்புக்கான அடிப்படை உபகரணங்களில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகிறது. வரும் ஆண்டுகளில் உலகின் முதல் 5 குறைக்கடத்தி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும். அதற்கான பாதையில் இந்தியா சென்று கொண்டிருக்கிறது.

இந்த வளர்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையே காரணம். அடுத்த மூன்றரை ஆண்டுகளில் இந்தியா முழுமையான 4ஜி தொலைத்தொடர்பு தளத்தை வடிவமைக்கும். இந்தியாவின் புல்லட் ரயில் திட்டம் வேகமாக நடைபெற்று வருகிறது. 2027-ம் ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பருக்குள் இந்தியாவில் புல்லட் ரயில் ஓடத் தொடங்கும் என தெரிவித்தார்.

# தங்கம் விலை மேலும் உயர்வு

சென்னை, ஜூலை 20-

தங்கம் விலை நேற்றும் உயர்ந்து விற்பனையானது. கிராமுக்கு 60 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 9,170 ரூபாய்க்கும் சவரனுக்கு 480 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் 73,360 ரூபாய்க்கும் விற்பனையானது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது ஏற்ற, இறக்கத்தை சந்தித்து வருகிறது. அந்த வகையில் கடந்த சில நாட்களாக தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடனேயே இருக்கிறது. கடந்த 3 நாட்களாக தங்கம் விலை உயர்ந்தே காணப்பட்டது. நேற்று தங்கம் விலை ஒரு கிராம் 9,110 ரூபாய்க்கும், ஒரு சவரன் 72,880 ரூபாய்க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், நேற்றும் தங்கம் விலை உயர்ந்து விற்பனையானது. கிராமுக்கு 60 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 9,170 ரூபாய்க்கும் சவரனுக்கு 480 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் 73,360 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. கிராமுக்கு ஒரு ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 126 ரூபாய்க்கும் கிலோவுக்கு ஆயிரம் ரூபாய் உயர்ந்து பார் வெள்ளி 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

# கோதாவரி - காவிரி நதிநீர் இணைப்பு திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

நாகை, ஜூலை 20-

கோதாவரி - காவிரி இணைப்பு திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களில் ''மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்'' என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், நாகை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (ஜூலை 18) இரவு வருகை தந்த பழனிசாமி, கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதியில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து, 2-வது நாளாக நேற்று (ஜூலை 19) நாகையில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அங்கு அவர் பேசுகையில், '' தி.மு.க. ஆட்சியில் 4 அதிகார மையங்கள் உள்ளன. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்தோம். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டது.

உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்று தந்தோம். மக்கள் விரும்பும் ஆட்சியில் அ.தி.மு.க. கொடுத்தது, அதனால் மக்கள் மத்தியில் எங்களுக்கு அதிக வரவேற்பு இருந்தது.

விவசாய விரோத ஆட்சி மக்களுக்குத் தேவையா? 50 மாதங்களில் நாகை மாவட்டத்துக்கு ஏதேனும் பெரிய திட்டத்தை தி.மு.க. அரசு கொண்டுவந்ததா?'' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

## கிங் படப்பிடிப்பு தளத்தில்


# ஷாருக்கானுக்கு பலத்த காயம்: அமெரிக்காவில் மேல்சிகிச்சை

மும்பை, ஜூலை 20-

கிங் படப்பிடிப்பு தளத்தில் ஷாருக்கானுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவருக்கு அமெரிக்காவில் மேல்சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.

பாலிவுட் பாட்ஷா', 'கிங் கான்' என ரசிகர்களால் அழைக்கப்படுபவர் நடிகர் ஷாருக்கான். பிரபல நடிகர் ஷாருக்கானுக்கு 2 மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

ஷாருக்கான் தற்போது 'தி கிங்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை சுஜோய் கோஷால் இயக்குகிறார். இப்படத்தை ஷாருக்கானின் சொந்த தயாரிப்பு நிறுவனமான 'ரெட் சில்லிஸ் என்டர்டெயின்மென்ட்' தயாரிக்கிறது. இந்த படத்தில் ஷாருக்கானின் மகள் சுஹானா கான் கதாநாயகியாக நடித்து வருகிறார். இந்த படம் ஒரு அதிரடி ஆக்ஷன் படம் என்றும் தந்தை மகள் ஆகிய இருவரும் படம் முழுவதும் நடிக்கும் வகையில் கதை அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



படப்பிடிப்பு பணிகள் மும்பையில் பரபரப்பாக நடைபெற்று வந்த நிலையில். அதிரடி ஆக்ஷன் காட்சி நேற்று படமாக்கப்பட்டது. அதில் ஷாருக் கான் ஈடுபட்டார் அப்போது எதிர்பாராத விதமாக அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அதன் சிகிச்சைக்காக அவரை அமெரிக்கா அழைத்து சென்றுள்ளனர். அவருக்கு தசை பிரண்டுள்ளது என கூறப்படுகிறது அதனால் 1 மாத காலம் அவர் ஓய்வு எடுக்கும்படி மருத்துவர் ஆலோசனை அளித்துள்ளனர். இதனால் படப்பிடிப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## மோதல் வழக்கு:

# சீமான் உள்ளிட்ட 19 பேர் விடுதலை

திருச்சி, ஜூலை 20-

ம.தி.மு.க. - நாம் தமிழர் கட்சியினர் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பான வழக்கில் சீமான் உள்ளிட்ட 19 பேரை விடுதலை செய்து திருச்சி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருச்சி விமான நிலையத்தில் கடந்த 2018-ஆம் ஆண்டு நாம் தமிழர், ம.தி.மு.க. கட்சியினருக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இந்த மோதலில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இருதரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டதாகத் தெரிவித்து, சீமான் உள்பட இருதரப்பைச் சேர்ந்த 19 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை கடந்த 7 ஆண்டுகளாக நடைபெற்று வந்த நிலையில், வழக்கின் விசாரணைக்காக, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கடந்த 16 ஆம் தேதி திருச்சி இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜரானார். இவ்வழக்கை விசாரித்த திருச்சி இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற நீதிபதி கோபிநாத், வழக்கின் தீர்ப்பை ஜூலை 19 இல் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில், மோதல் வழக்கில் சீமான் உள்ளிட்ட இருதரப்பைச் சேர்ந்த 19 பேரையும் விடுவித்து திருச்சி இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## இ.பி.எஸ். தானாக பேசவில்லை;

# யாரோ அவரை பேச வைக்கிறார்கள்: திருமாவளவன் கடும் விமர்சனம்

சென்னை, ஜூலை 20-

'இ.பி.எஸ்., அவராக பேசவில்லை. அவரை இவ்வாறு யாரோ பேச வைக்கிறார்கள்'' என திருமாவளவன் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களை திருமாவளவன் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், தி.மு.க.,வுக்கு கம்யூனிஸ்ட், வி.சி.க., அடிமை சாசனம் எழுதி கொடுத்துள்ளது என இ.பி.எஸ்., மீண்டும் பேசி உள்ளார். இது அவருக்கு கொடுக்கப்பட்டு இருக்கும் செயல்திட்டம். அது ஒரு அஜெண்டா. யார் அவருக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்பது தெரியாது. ஆனால் மக்களை சந்திக்கும் போது, மக்களுக்காக அவர் கோரிக்கைகளை பேசுவதை விட தி.மு.க., கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பது, விமர்சிப்பது என்கிற நிலையில் அவரது உரைகளும், பேட்டிகளும் விளங்குகின்றன. சாதாரணமான ஆட்களுக்கே இதில் இருக்கும் பின்புலம் குறித்து புரிந்து கொள்ள முடியும். அவராக இதை பேசவில்லை. அவரை இவ்வாறு யாரோ பேச வைக்கிறார்கள் என்று தான் புரிந்து கொள்ள முடிகிறது.

திருவள்ளூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில், 10 நாட்கள் ஆகியும் குற்றவாளி இதுவரை கைது செய்யப்படவில்லை என்பது அதிர்ச்சி அளிக்கிறது. போலீசார் விரைந்து செயல்பட வேண்டும். விசாரிப்பதற்கு சிறப்பு புலனாய்வு குழுவை நியமிக்க வேண்டும். குற்றவாளி யாராக இருந்தாலும் கைது செய்து, விரைந்து விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மருத்துவர்கள் நியமன காலியிடங்கள் அதிகரிப்பு அறிவிப்பு ரத்து: ஐகோர்ட்

சென்னை, ஜூலை 20-

இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவர்கள் நியமனத்துக்கான தேர்வு நடைமுறைகள் முடிந்த பின், காலியிடங்களின் எண்ணிக்கையை அதிகரித்து மருத்துவ தேர்வு வாரியம் பிறப்பித்த அறிவிப்பை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் காலியாக இருந்த மூன்று இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்று மருத்துவ தேர்வு வாரியம், 2020 ஆம் ஆண்டு அறிவிப்பு வெளியிட்டது. கரோனா ஊரடங்கு காரணமாக அப்போது தேர்வு நடத்தப்படவில்லை.

பின்னர், இந்த காலியிடங்களின் எண்ணிக்கையை 35 ஆக அதிகரித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின் அடிப்படையில், 2025 மார்ச் மாதம் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், காலியிடங்களின் எண்ணிக்கையை 35-ல் இருந்து 54 ஆக அதிகரித்து கடந்த ஏப்ரல் மாதம் புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதை எதிர்த்து சித்தார்த், அண்ணாமலை, அமிர்த செல்வராஜன் ஆகிய மருத்துவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சி.குமரப்பன், அசாதாரண மற்றும் அவசர சூழ்நிலைகளின் போது காலியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். இந்த வழக்கில் அதுபோல அசாதாரண சூழல் ஏதுமில்லை எனக் கூறி, காலியிடங்களின் எண்ணிக்கையை 35-ல் இருந்து 54 ஆக அதிகரித்த அறிவிப்பை ரத்து செய்து உத்தரவிட்டார்.

தேர்வு நடைமுறைகள் முடிந்த பின் காலியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அரசியல் சாசனத்துக்கு விரோதமானது.

இதை அனுமதித்தால், பின்னாளில் தகுதி பெற்று வேலைவாய்ப்புக்காக காத்திருப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனக் குறிப்பிட்ட நீதிபதி, ஏற்கனவே நடத்தப்பட்ட தேர்வு அடிப்படையில் 35 காலியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதித்து உத்தரவிட்டுள்ளார்

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 24 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

தருமபுரி, ஜூலை 20-

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 24 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக, கேரள மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளின் இருந்து அதிகளவு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டது.

இந்த நிலையில் கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் அளவு அதிகரிப்பதும், குறைப்பதுமாக இருந்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 20 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 24 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவி உள்பட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்து பார்த்தனர். பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தின் நின்றவாறு காவிரி ஆற்றில் விழும் தண்ணீரை ரசித்து பார்த்தனர். மெயின் அருவியில் ஆனந்தமாக அவர்கள் குளித்து மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து அளவீடு செய்து கண்காணித்து வருகிறார்கள்.

# த.வெ.க. மாவட்ட செயலாளர்களுடன் விஜய் இன்று முக்கிய ஆலோசனை


## புதிய செயலி அறிமுகம்

சென்னை, ஜூலை 20-

மதுரை மாநாடு மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்து மாவட்ட செயலாளர்களுடன் விஜய் இன்று கலந்துரையாட இருக்கிறார்.

சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள த.வெ.க. வியூகம் அமைத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஆகஸ்டு 25-ந்தேதி மதுரையில் கட்சியின் 2-வது மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம், கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து விஜய் பேச இருக்கிறார்.

இதற்கிடையே, மாநாடு மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்து மாவட்ட செயலாளர்களுடன் விஜய் கலந்துரையாட இருக்கிறார். இந்த கலந்துரையாடல் கூட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடக்க உள்ளது. இதற்கான அழைப்பு மாவட்ட செயலாளர்களுக்கு விடுக்கப்பட்டு உள்ளது. இந்த கூட்டத்தில், உறுப்பினர் சேர்க்கைக்கான புதிய செயலியை விஜய் அறிமுகம் செய்கிறார். இந்த புதிய செயலி வழியே உறுப்பினர் சேர்க்கை தீவிரப்படுத்தப்பட உள்ளது. இந்த செயலி செயல்முறை குறித்த பயிற்சி, மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது.



அதனை தொடர்ந்து மதுரை 2-வது மாநில மாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், குழுக்கள் அமைப்பு குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

# நீலகிரியில் கனமழை: சுற்றுலா தலங்கள் மூடல்

ஊட்டி, ஜூலை 20-

கனமழை காரணமாக வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பைன்பாரஸ்ட், அவலாஞ்சி உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது

நீலகிரி மாவட்டம் குன்னூர், கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று நீலகிரி, கோவைக்கு ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. தொடர்ந்து பிற்பகலில் கட்டபெட்டு, பெட்டட்டி, வெஸ்ட்புரூக், பாண்டியன் பார்க், ஒரசோலை, தாந்தநாடு உள்ளிட்ட பகுதிகளில் சாரல் மழை பெய்தது.

இது மாலை நேரம் வரை தொடர்ந்து நீடித்தது. இதன் காரணமாக அந்த பகுதியில் கடுங்குளிர் நிலவியது. இதன் காரணமாக சாலையோர வியாபாரிகள், பாதசாரிகள் மற்றும் பள்ளி-கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கடும் குளிரால் பாதிக்கப்பட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பைன்பாரஸ்ட், அவலாஞ்சி உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் இன்று ஒருநாள் மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது. அதன்படி அங்கு சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை.

விடுமுறை தினமான நேற்று அங்கு வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். மற்ற சுற்றுலா தலங்கள் வழக்கம் போல திறந்து இருந்தன. அங்கு சுற்றுலா பயணிகள் குவிந்து, தங்கள் பொழுதை கழித்தனர்.

## சிறுமி பாலியல் வன்கொடுமை விவகாரம்:

# தேசிய மகளிர் நல ஆணையத்திற்கு அ.தி.மு.க. கடிதம்

சென்னை, ஜூலை 20-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தை விசாரிக்கக்கோரி தேசிய மகளிர் நல ஆணையத்திற்கு அ.தி.மு.க. கடிதம் எழுதி உள்ளது.

அதில், கும்மிடிப்பூண்டி அருகே 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும். பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தேவையான உதவிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். 2022-2025 வரை நடந்த வன்கொடுமைகள் தொடர்பாக ஓய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதியை நியமித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



கடல் வளங்களை அழித்து, மீனவ மக்களை வாழ்விடங்களை விட்டு வெளியேற்ற வழிவகுக்கும் திட்டமான, சிறு துறைமுகங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். இந்த விவகாரத்தில் மீனவ மக்களின் கருத்துக்களை அரசு கேட்க வேண்டும்.

- சீமான்




தனியார் பள்ளிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகையை தமிழக அரசு உடனடியாக உடனடியாக விடுவிக்க வேண்டும். அதன் மூலம் தனியார் பள்ளிகளில் ஒரு லட்சம் பேருக்கு உடனடியாக சேர்க்கை கிடைப்பதையும், ஏற்கனவே பயின்று வரும் 8 லட்சம் மாணவர்களின் கல்வி பாதிப்பின்றி தொடர்வதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

- அன்புமணி



அரசியலமைப்பு சாசனத்தில் திருத்தம் செய்வது அல்லது அதை மீண்டும் எழுதுவது குறித்து பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் பேசி வருகின்றன. ஆனால், எவ்வளவு முயற்சித்தாலும் அரசியலமைப்பு சாசனத்தை மாற்ற மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். அரசியலமைப்பு சாசனத்தை மாற்ற அனுமதித்தால் மக்களுக்கு எந்த உரிமையும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் தரமாட்டார்கள்.

- மல்லிகார்ஜுன கார்கே



பணம் வாங்கிய பிரச்சினையை 2019 லிருந்து சில எதிர்க்கட்சித் தலைவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தி.மு.க.வுடன் 2019 தேர்தலில் தொகுதி உடன்பாடு செய்து போட்டியிட்டபோது, தேர்தல் செலவுக்காக தி.மு.க.விடம் இருந்து வாங்கிய பணத்தில் ஒரு சிங்கிள் டீ கூட கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டன் குடிக்கவில்லை.

- சண்முகம்

# தூத்துக்குடியில் குரூப் 2, 2ஏ தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் : கலெக்டர் இளம்பகவத் தகவல்

**திருச்செந்தூர்,ஜூலை.20-** தூத்துக்குடியில் டிஎன்பிஎஸ்சி நடத்தும் குரூப் 2, 2ஏ முதல்நிலை தேர்விற்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தமிழக அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் TN PSC, TNUSRB மற்றும் TRB ஆகிய போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 595 காலிப் பணியிடங்களுக்கு TNPSC Group-II & II-A முதல்நிலை தேர்வுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த TNPSC Group-II & II-A முதல்நிலை தேர்வானது வரும் 28.09.2025 அன்று நடைபெறும்.

இந்த தேர்விற்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி நாள் 13.08.2025. இந்த தேர்வுக்கு தயாராகும் தூத்துக்குடி மாவட்ட தேர்வர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோரம்பள்ளம், தூத்துக்குடியில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் 25.07.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு துவங்கப்படவுள்ளது . இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த பயிற்றுநர்களை கொண்டு நடத்தப்படவுள்ளது. மேலும் வாரந்தோறும் மாதிரி தேர்வுகளும் நடத்தப்படும். இப்போட்டித் தேர்வுக்கு தேவையான அனைத்து புத்தகங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக நூலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பம் உடையவர்கள் Thoothukudi Employment Office என்ற Telegram சேனலில் கொடுக்கப்பட்டுள்ள Google படிவத்தை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் 0461 - 2003251 என்ற தொலைபேசி எண் வாயிலாகவோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. TNPSC Group - II & II-A முதல்நிலை தேர்வுக்கு தயாராகும் தேர்வர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டு பயன்பெறுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார். பெரும்பாலான மாணவர்களுக்கு விருப்பமான பாடம் அறிவியல் : ஆட்சியர் க.இளம்பகவத் தகவல்! பெரும்பாலான மாணவர்களுக்கு விருப்பமான பாடம் எதுவென்றால் அறிவியல் தான் என்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்தார். தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அழகர் பப்ளிக் பள்ளியில் இன்று (19.07.2025) மாணவர்களின் அறிவியல் படைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பட்ட வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி என்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, மாணவர்களின் அறிவியல் படைப்புகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரிவித்ததாவது : "வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி" என்ற நிகழ்வில் பங்கேற்க வந்திருக்கும் மாணவ மாணவியர்கள், ஆசிரியர் பெருமக்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். மாணவர்களின் அறிவியல் திறனை மேம்படுத்தும் விதமாக, அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தும் விதமாக வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி என்ற நிகழ்வு 2012 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. அறிவியல் சிந்தனைகளை தூண்டக் கூடியதாக இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்களாகிய நீங்கள் தற்பொழுது 6 முதல் 12 – ஆம் வகுப்பு வரை வெவ்வேறு வகுப்புகளில் பயின்று வருகிறீர்கள்.

குறிப்பாக பெரும்பாலான மாணவர்களுக்கு விருப்பமான பாடம் எதுவென்றால் அறிவியல் தான். அறிவியல் பாடம் ஏன் அனைவருக்கும் மிகவும் பிடித்த பாடமாக உள்ளது என்றால் அதன் விளைவுகளை உடனடியாக உணர்கிறோம் மற்றும் உடனடியாக அதன் பலனை பயன்படுத்துகிறோம். மற்ற பாடங்களில் அதன் பலனை உடனடியாக உணர முடியாது. உதாரணமாக நான் ஒரு வரலாற்று மாணவன். வரலாறு பற்றி படிக்கின்ற பொழுது பழைய காலத்தில் உள்ள போர்கள், பழைய பேரரசுகள் எவ்வாறு வீழ்ந்தன, எவ்வாறு உயர்ந்தன என்பது பற்றி எல்லாம் கற்போம். அதனுடைய பலனை உடனடியாக உணர முடியாது. அதன் விளைவுகளை பற்றி புரிந்து கொள்ள முடியும். எதிர்காலத்தில் நமது வாழ்க்கையிலும், நமது நாட்டினுடைய முன்னேற்றத்திலும் அதன் தாக்கத்தை உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் அறிவியலில் அப்படிப்பட்டது அல்ல. குறிப்பாக எலக்ட்ரானிக் சம்மந்தாக கற்கின்ற பொழுது அதன் விளைவினை உடனடியாக உணர முடியும். அந்த காரணத்தினால் தான் அறிவியல் பாடம் என்பது மாணவர்களுக்கு விருப்பமான பாடப்பிரிவாக திகழ்ந்து வருகிறது. அரசியலமைப்பை வகுத்த அறிஞர்கள் 1972 ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் முக்கியமான பிரிவினை சேர்த்தார்கள். மாணவர்களிடமும், இளைஞர்களிடமும், மக்களிடமும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அதற்கான முன் முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற பிரிவினை அரசியலமைப்பில் சேர்த்தார்கள். அறிவியல் மனப்பான்மை என்றால் நமது வாழ்க்கையின் சிக்கல்களுக்கும், நமது நாடு எதிர்கொள்ளுகின்ற சிக்கல்களுக்குமான தீர்வை நாம் மூடநம்பிக்கைகளிடமோ அல்லது அறிவியலுக்கு புறம்பான நம்பிக்கைகளிடமோ தேடக்கூடாது. அறிவியல் சார்ந்த தீர்வுகளுக்கு தான் மக்கள் சிந்திக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது என்பது அரசின் முக்கிய கொள்கையாக வகுக்க வேண்டும் என அரசியலமைப்பு பிரிவில் சேர்க்கப்பட்டது. இந்தியாவிலேயே மிகச்சிறந்த அறிவியல், பொறியியல், தொழில்நுட்ப கல்லூரிகள் இருக்கக்கூடிய ஒரு மாநிலமாக நமது தமிழ்நாடு உள்ளது. அதற்கான காரணம் தொடர்ச்சியாக பல்வேறு அறிவியல் சார்ந்த படிப்புகளையும், அறிவியலின் முக்கியத்துவத்தையும் நமது கல்வியாளர்களும், தலைவர்களும் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். மூடநம்பிக்கைகளில் நாம் மூழ்கி விடக்கூடாது என கல்வியாளர்களும், தலைவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

மூடநம்பிக்கைகள் பற்றிய விழிப்புணர்வுக்காக தலைவர்கள் பாடுபட்டு இருக்கிறார்கள். கல்வியாளர்கள்டமும் மூடநம்பிக்கைகளை ஒழித்துவிட்டு அறிவியல் மனப்பான்மையை மாணாக்கர்களிடம் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் வகுப்பறையில் கற்று கொடுத்து வருகிறார்கள். கல்லூரிகளிலும் மூடநம்பிக்கைகளை போக்குவதற்காக பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து, அறிவியல் சார்ந்த தீர்வுகளை வலியுறுத்தி வருகிறார்கள். பல ஆண்டுகளாக மேற்கொண்ட தொடர் விழிப்புணர்வு காரணமாக, மற்ற மாநிலங்களை காட்டிலும், தமிழ்நாட்டில் தான் பொறியியல், அறிவியல், கணினி அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்தவை உள்ளிட்ட அறிவியல் சார்ந்த படிப்புகளை படிக்கின்ற மாணவர்கள் அதிகமாக உள்ளனர்.

உலகத்திலேயே மிக அதிகமான தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்ட ஒரு மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான நிறுவனங்களில் முக்கிய பதவிகளில், மிக உயர்ந்த தொழில்நுட்பம் சார்ந்த பதவிகளில் தமிழ்நாட்டை சார்ந்த பொறியாளர்கள், அறிவியல் வல்லுநர்கள் பதவி வகிக்கின்றனர். கணினி தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு பிரிவுகளிலும் தமிழ்நாட்டை சார்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அரசு மற்றும் தனியார் சார்ந்த நிறுவனங்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், நமது பெற்றோர்கள் அறிவியலை ஏற்றுக் கொண்ட விதம், இதன் காரணமாக தான் அறிவியல் சார்ந்த படிப்புகளில் மாணவர்கள் கற்றுக் கொண்டதினால் சிறந்த உயர்பதவிகளுக்கு சென்று இருக்கிறார்கள். இதன் விளைவாக உலக அளவில், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் துறை, பொறியியல் துறை, உயிர் தொழில்நுட்பவியல் துறை மிக அதிகமான மாணவர்கள் சேர்ந்து கற்றுக் கொண்டு உயர்கல்வி பெற்று, அந்த நாடுகளில் உள்ள உயர்ந்த கல்வி நிறுவனங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் உயர்ந்த பதவிகளில் வகிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சமூகத்தை அறிவியலை நோக்கி நகர்த்துவதற்கு கல்வியாளர்கள், தலைவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் சேர்ந்து முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அறிவியல் சார்ந்து படிப்பதற்காக ஒரு சூழலை ஏற்படும் விளைவுகளாக நாம் கருதுவது பிற்போக்கான கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளுதல் ஆகும். மாணவர்களுக்கு அறிவியலை ஊக்குவிக்கும் விதத்தில் இந்நிகழ்ச்சியின் வாயிலாக மாணவர்கள் தங்களது அறிவியல் படைப்பாக்கங்களை கண்காட்சியில் பங்கேற்றுள்ளனர். காந்தத்தின் மூலம் மின்சாரத்தை மைக்கேல் பாரடே கண்டுபிடித்ததினால், மின்சாரம் என்ற மாபெரும் பயன்பாடு வந்தது. நீங்கள் எல்லாரும் எதிர்காலத்தில் மாபெரும் விஞ்ஞானிகளாக வர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரிவித்துள்ளார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாணவ மாணவியர்களின் அறிவியல் படைப்பு கண்காட்சியினை பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, அழகர் பப்ளிக் பள்ளியின் தலைவர் ஏ.ஜெயராமன், பல்வேறு பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# உடன்குடி அனல் மின் நிலையத்தில் வரும் செப்டம்பரில் மின் உற்பத்தி செய்து வினியோகம் செய்யப்படும்

## தமிழ்நாடு மின்வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன் திட்டவட்டம்



திருச்செந்தூர் ஜூலை.20- உடன்குடி அனல் மின் நிலையத்தில் வரும் செப்டம்பர் மாதம் முதல் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகம் செய்யப்படும் என தமிழ்நாடு மின்வாரியத்துறை தலைவர் ராதாகிருஷ்ணன் திட்டவட்டமாக தெரிவித்தார்.

உடன்குடி கல்லாமொழி பகுதியில் சுமார் ரூ 13,077 கோடி மதிப்பில் 660 மெகாவாட் கொண்ட இரண்டு அலகுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அனல்மின் நிலையம், நிலக்கரி இறங்கு தள துறைமுகம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த 2017ம் ஆண்டு தொடங்கப்பட்ட பணிகளில் துறைமுக பணிகள் தற்போது 99 சதவீதம் நிறைவடைந்து, அனல் மின் நிலைய வளாகப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. அழகு நிலைய பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ள நிலையில் உடன்குடி அனல்மின் நிலையங்களின் செயல்பாடுகள் மற்றும் நிலக்கரி கையாளும் இடங்களை தமிழக மின்வாரிய நிறுவனத் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான ராதாகிருஷ்ணன் தலைமையிலான உயர்நிலைக் குழு நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வில் அனல்மின் நிலையங்களின் கொதிகலன் செயல்திறன், நீராவிச்சுழலி, கட்டுப்பாட்டு அறை, ஜெனரேட்டர், நிலக்கரி வருகை, நிலக்கரி சேமிப்பு கிடங்கு, நிலக்கரி கையாளும் விதம், கன்வேயர் அமைப்புகளின் செயல்திறன், உலர் சாம்பல் வெளியேற்றும் செயல்முறைகள், அனல் மின் நிலைய பாதுகாப்பு நெறிமுறைகள், மின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து ராதாகிருஷ்ணன் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். மேலும் கடல்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி இறங்கு தளம் பகுதிகளையும் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து நிருபர்களிடம் கூறுகையில்,

உடன்குடி அனல்மின் நிலையம் பணிகள் தொடங்க 2012ம் ஆண்டு திட்டமிட்டாலும் பல்வேறு பிரச்சனைகளால் 2017ம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டது. தற்போது முழுமையாக கடல் பகுதியில் பணிகள் நிறைவடைந்துள்ளது. இங்கு மிகவும் முக்கியமான பிரச்சனை என்னவென்றால் ஆட்கள் பற்றாக்குறை. இருந்தாலும் பாய்லர் பணிகள், ஜெனரேட்டர் பணிகள், பவர் சைக்கிள் பியூர் வாட்டர் சிஸ்டம், கூலிங் வாட்டர் உள்பட பல்வேறு பணிகள் நிறைவடைந்துள்ளது. ஆனால் சாலை அமைக்கும் பணிகள் உள்ளது. இரு யூனிட்டில் ஒரு யூனிட் பணிகள் முழுமையாக நிறைவடைந்து நாம் ஏற்கனவே சோதனை ஓட்டமும் செய்துள்ளோம். பல்வேறு பணிகள் இன்னும் நிறைவடையாமல் உள்ளது. வருகிற கோடை காலத்திற்குள் இந்த உடன்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட உள்ள 1320வாட் மின்சாரம் மிகவும் முக்கியமானது. எனவே இதில் தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தி உள்ளார். செப்டம்பர் மாதம் இறுதி வரை பணிகள் உள்ளது என்பது தான் இங்குள்ள உண்மையான நிலை. ஆள் பற்றாக்குறை தான் உடன்குடி அனல்மின் நிலைய பணிகள் நிறைவு பெற தாமதமாவதற்கு காரணம்.

தமிழகத்தில் ஒரு நேரத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஆட்கள் பற்றாக்குறை இருந்தது. ஆனால் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு இடங்கள் சரி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் சில பணிகளுக்கு சரியான ஆட்களை தேர்வு செய்தால் மட்டுமே இதை சரி செய்ய முடியும். எனவே மின்சார வாரியத்தில் பணியாளர்கள் பற்றாக்குறையை சரி செய ஆட்கள் எடுக்கும் பணியை விரைவு படுத்த உள்ளோம். ஏற்கனவே டிஎன்பிஎஸ்சி மூலம் 211 பேர் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இன்னும் 500 பேர் பரிசோதனைக்காக அனுப்பி உள்ளோம். விரைந்து பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்த அனல்மின்நிலையத்திற்கு மத்திய, மாநில அரசு என மொத்தம் 30க்கும் மேற்பட்ட ஒப்புதல்கள் பெறப்பட வேண்டிய சூழல் உள்ளது.இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மின்வாரிய வசதிக்காக துறைமுகம் வசதியுடன் கூடிய மின்உற்பத்தி வசதியை மாநில அரசு உருவாக்கியுள்ளது. மேலும் தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென்பகுதிகளில் தான் பசுமைதிறன் அமைந்திருப்பதாகவும் அதனால் தான் காற்றாலை மூலம் போன்றவை மின் உற்பத்தி செய்ப்படுவதாகவும், ஆனால் காற்று இல்லாத நேரங்களில் மின்பயன் பட்டிற்காக பேட்டரி மூலம் மின்சாரத்தை சேமிக்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. உடன்குடி அனல் மின் நிலையத்தில் சுமார் ரூ 6000 கோடி மதிப்பில் மூன்றாவது அலகு அமைக்க திட்டமிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மின்வாரியத்துறை ஒரு ராணுவ அமைப்பு போன்றது இது தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய துறை என்றும் அதனால் தான் ஆள் பற்றாக்குறை என்பது ஏற்பட்டிருப்பதாவும் அதுபற்றி தெரிந்தவர்கள் மட்டுமே பணி செய்ய முடியும் என அவர் கூறினார். இந்த ஆய்வின் போது தலைமை பொறியாளர் கண்ணன், மேற்பார்வை பொறியாளர் ராம்குமார், செயற்பொறியாளர்கள் பாலாஜி, மோகன்ராஜ் , முத்துக்குட்டி, அப்துல் பகிம், ஜெயந்தி, டேவிட், மூர்த்தி, சுப்புராஜ், பிரபுஉட்பட மின் வாரிய அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

# ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் எமோஜி தினம்



**தென்காசி ஜூலை.20:** உலக எமோஜி தினத்தை ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் கே.ஜி. மாணவ மாணவிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். மாணவிகளுக்கு எமோஜிகள் என்றால் என்ன அவை எவ்வாறு உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகின்றன என்பது பற்றி ஆசிரியர்கள் விளக்கினர். பிரபல எமோஜிகள் குறித்தும் மாணவர்கள் அறிந்தனர். கே.ஜி. மாணவ, மாணவிகள் எமோஜி முகமூடிகள், வரைவுகள் மற்றும் கைவினை செயல்பாடுகளில் ஆர்வமாக பங்கேற்றனர். பசுமை, சிரிப்பு, உணர்வு என அனைத்தையும் வெளிப்படுத்தும் எமோஜிகள் பற்றிய அறிவும், மகிழ்ச்சியும் மாணவர்களிடம் காணப்பட்டது.

# குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியில் பேரவைத் தேர்தல்



தென்காசி ஜூலை.20

2025-2026 ஆம் கல்வியாண்டின் மாணவர் பேரவைத் தேர்தல் கல்லூரிச் செயலர் அன்புமணி, கல்லூரி முதல்வர் முனைவர். அமிர்தவல்லி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இளநிலை/இளங்கலை இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு பயிலும் மாணவியர்கள் மற்றும் முதுநிலை/முதுகலை இரண்டாமாண்டு பயிலும் மாணவியர்கள் என 1127 மற்றும் சுய நிதிப்பிரிவில் 696 மாணவியர்கள் கணினியில் தங்களது வாக்குகளை நேரடியாகப் பதிவு செய்தனர்.தேர்தலில் வெற்றி பெற்ற மாணவியர்களின் பெயர் களைக் கல்லூரி முதல்வர் அறிவித்தார். 2025-2026 ஆம் கல்வியாண்டின் மாணவர் பேரவைத் தேர்தலில் மாணவி பேரவைத் தலைவராக ஆங்கிலம் இளங்கலை மூன்றாமாண்டு .நர்மதா, துணைத்தலைவராக விலங்கியல் முதுநிலை இரண்டாமாண்டு பிரீத்தி , மாணவி செயலராக விலங்கியல் இளங்கலை மூன்றாமாண்டு பிரியங்கா, இணைச்செயலாளராக வணிகவியல் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி ராகவர்த்தினி, நுண்கலைச் செயலாளராக ஆங்கிலம் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி கிறிஸ்டி, இலக்கிய மன்றச் செயலாளராக ஆங்கிலம் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி வைத்தீஸ்வரி, கல்லூரி ஆண்டு விழா மலர் செயலாளராக வரலாறு இளங்கலை மூன்றாமாண்டு மாணவி பிருந்தாலட்சுமி, சுயநிதிப்பிரிவு செயலாளராக ஆங்கிலம் இளங்கலை மூன்றாமாண்டு மாணவி மம்தி, சுயநிதிப்பிரிவு துணைச் செயலாளராக கணிதம் முதுநிலை இரண்டாமாண்டு சஞ்சிதா பாத்திமா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு கல்லூரிச் செயலர் முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.. மாணவர் பேரவைத் தேர்தலை ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாண்டிமாதேவி மற்றும் உறுப்பினர்கள் முனைவர் இசக்கியம்மாள்,முனைவர் .சுதா,முனைவர் சுதனா, முனைவர். ரெஜிக்கண்ணா ,முனைவர். மகாதேவி, பவுண்முனியம்மாள், பிரபா, முனைவர். அம்புளி,முனைவர். மகேஷ்வரி, முத்துலட்சுமி ,செல்வராணி, விக்டோரியா, .கலைச்செல்வி, .வெங்கடேஸ்வரி, அமுதா, .சுபாசினி போன்றோர் நடத்தினர்

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்: கடையநல்லூரில் நகர்மன்ற துணைத்தலைவர் ராசையா துவக்கி வைத்தார்



**தென்காசி ஜூலை .20-** கடையநல்லூரில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமை நகர்மன்ற துணைத்தலைவர் ராசையா துவக்கி வைத்தார். இதில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

தமிழக அரசின் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம், பொதுமக்களின் வீடுகளுக்கே சென்று அரசுச் சேவைகளை வழங்கும் ஒரு சிறப்பான திட்டமாகும். கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட 11,13,18, வார்டுகளில் நேற்று காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பேட்டை ஜலாலியா திருமண மண்டபத்தில் இம்முகாம் நடைபெற்றது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று சேவைகளைப் பெறுவதில் உள்ள சிரமங்களைத் தவிர்த்து, அவர்களின் இருப்பிடத்திலேயே அரசுத் திட்டங்களை வழங்குவதாகும். பட்டா மாறுதல், இருப்பிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வருமான வரிச் சான்றிதழ், ரேஷன் அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மின்வாரியத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை காவல்துறை கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்குமான மனுக்கள் பெறப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர் முகாம் நடைபெறும் இடத்திற்கு நேரடியாக வந்து ஆய்வை மேற்கொண்டார். முகாமை நகர் மன்ற துணைத் தலைவர் ராசையா துவக்கி வைத்தார். அப்போது அவர், தமிழக அரசு பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறது. அதே போல உங்களுடன் ஸ்டாலின் திட்டமும் வரலாற்று சிறப்பு மிக்க திட்டமாக அமைந்துள்ளது. அனைத்து புகழும் நமது முதல்வரேயே சாரும் என பேசினார். முகாம் ஏற்பாடுகளை நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், தாசில்தார் பாலசுப்பிரமணியன் உட்பட அனைத்து துறை அதிகாரிகளும் செய்தனர். நிகழ்ச்சியில் நகர திமுக செயலாளர்கள் அப்பாஸ், பீரப்பா, இளைஞர் அணி அமைப்பாளர் யாசின் மாவட்ட பிரதிநிதி சிட்டி திவான் மைதீன், உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# மாணவ, மாணவிகளின் கோரிக்கைகளை ஏற்று புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏ

## மாணவ,மாணவிகள், பொதுமக்கள் நன்றி



**சங்கரன்கோவில். ஜூலை.20.** சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளப்பனேரி கிராமம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து கோவில்பட்டிக்கு பேருந்து இயக்க வேண்டுமென தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் மாணவ மாணவிகள் மற்றும் கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர்.

அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ராஜா எம்எல்ஏ இதுகுறித்து போக்குவரத்து துறை அதிகாரிகளிடம் பேசி மாணவ, மாணவிகள் பள்ளிக்கு சென்று வரும் வகையிலும், பொதுமக்கள் தங்கள் பணிகளுக்காக வெளியில் சென்று வரும் வகையிலும் கோவில்பட்டியில் இருந்து வெள்ளப்பனேரிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கம் வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

ராஜா எம்எல்ஏவின் கோரிக்கையை ஏற்று உடனடியாக புதிய வழித்தடத்தில் பேருந்து துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு புதிய வழித்தட பேருந்தை துவக்கி வைத்தார். இந்த பேருந்தானது வெள்ளப்பனேரியிலிருந்து இருந்து கிளம்பி கைப்படம், மடத்துப்பட்டிவிலக்கு,சிதம்பரபரம், கழுகுமலை வழியாக கோவில்பட்டிக்கு செல்கிறது. இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்ப அணி வீமராஜ், பூலித்தேவர் மக்கள் முன்னேற்ற கழக மாநில கொள்கை பரப்பு செயலாளர் முருகன்,கிளை செயலாளர் மகாராஜன் மற்றும் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



**தென்காசி நகர தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகர தலைவர் அபுபக்கர் தலைமை தாங்கினார். நகர செயலாளர் அப்துல்காதர், நகர பொருளாளர் யூசுப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் அப்துல் அஜீஸ், மாவட்ட செயலாளர் செய்யது பட்டாணி, மாவட்ட இளைஞர் அணி தலைவர் செய்யது அபு தாஹீர், மாநில விவசாய அணி செயலாளர் தென்காசி முகம்மது அலி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தென்காசி ஜபார் தலைமையில் 25 க்கும் மேற்பட்டோர் தங்களை தாய் சபையில் இணைத்து கொண்டனர்.**

# நெகிழி ஒழிப்பு துப்புரவு பணி: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி ஜூலை.20:**

தென்காசி வனகோட்டம் குற்றாலம் காப்புக்காடு மற்றும் அறநிலையத்துறை வாகன காப்பக பகுதிகளில் வனத்துறை சார்பில் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் மாபெரும் நெகழி ஒழிப்பு துப்புரவு பணி நடைபெற்றது.

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர் உத்தரவின்படி தமிழகம் முழுவதும் நெகிழி தூய்மை பணி நடைபெறுகிறது அதன் அங்கமாக தென்காசி வனகோட்டம் குற்றாலம் காப்புக்காடு மற்றும் அதன் அருகில் உள்ள அறநிலையத்துறை வாகன காப்பக பகுதிகளில் வனத்துறை சார்பில் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் மாவட்ட வனஅலுவலர் அகில்தம்பி, முன்னிலையில் மாபெரும் நெகழி ஒழிப்பு துப்புரவு பணி நடைபெற்றது.இத்தூய்மைப் பணியில், குற்றாலம் பேரூராட்சி தலைவர் கணேஷ்தாமோதரன், செயல் அலுவலர் சுஷாமா, தென்காசி உதவி வன பாதுகாவலர் நெல்லைநாயகம், தென்காசி வனச் சரக அலுவலர் முருகன், கடையநல்லூர், செங்கோட்டை வனச்சரகம் பணியாளர்கள், குற்றாலம் பராசக்தி கல்லூரி மாணவியர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# இலஞ்சி பி.எட். கல்லூரி சிறப்பாக செயல்பட்டு வருகிறது: பல்கலை துணைவேந்தர் பாராட்டு




தென்காசி,ஜூலை.20-

தென்காசி அருகே உள்ள இலஞ்சி பிஎட் கல்லூரி தென்காசி மாவட்டத்தில் சிறந்த கல்லூரியாக செயல்பட்டு வருவதாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பாராட்டு தெரிவித்தார்.

தென்காசி அருகே உள்ள இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா கல்லூரியின் சேர்மன் நெல்லை பேராயர் ஏஆர்ஜிஎஸ்டி பர்னபாஸ் தலைமையில் நடந்தது. தாளாளர் ராஜகுமார், ஆலோசகர் முனைவர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார் முதல்வர் முனைவர் கலா வின்சிலா வரவேற்றார் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் சந்திரசேகர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பட்டம் பெற்ற மாணவ ஆசிரியர்களுக்கு பட்டங்கள் வழங்கி பேசியதாவது. சமுதாயத்தின் வளர்ச்சியிலும், நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வதிலும் கல்வி முக்கிய பங்கினை வகிக்கிறது அந்த கல்வியை புகட்டுவதிற்கு ஆசிரியர்கள் பணி இன்றியமையாதது. அதற்கான ஆசிரியர்களை உருவாக்குவதில் தென் மாவட்ட அளவில் அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரி சிறந்து விளங்கி வருவது பாராட்டுக்குரியது என பேசினார். ஆசிரியர்கள் அப்துல் கலாம் போன்று சிறந்த ஆசிரியர்களாக உருவாக வேண்டும் என பேசினார். விழாவிற்கு ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் அருள்திரு ஸ்டேன்லி இம்மானுவேல், அந்தோணி, ராஜேந்திரன், உதவி பேராசிரியர்கள் ஷீலா நவரோசி, ஜெனிபர், லீதியாள் சொர்ண ஜெயா, ஐரீன், நூலகர் முனைவர் ஏஞ்சலின், உடற்கல்வி இயக்குனர் ஐசக், அனிதா, அலுவலக பணியாளர்கள் ப்ரெட்ரிக், ஷேரன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# அதிமுக பொதுச் செயலாளர் தென்காசி வருகை ஆட்டோக்களில் ஸ்டிக்கர் ஒட்டி விழிப்புணர்வு பிரச்சாரம்



**தென்காசி ஜூலை ; 20 -**

குற்றாலத்தில் அதிமுக பொதுச் செயலாளர் தென்காசி வருகை குறித்த ஸ்டிக்கர்களை ஆட்டோக்களில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதிமுக பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர், எடப்பாடியார் "மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்" என்ற லட்சிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு வருகிற 5 ம் தேதி வருகை தர உள்ளார், அந்த நிகழ்ச்சி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்" என்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை குற்றாலம் பேரூர் கழக செயலாளரும் பேரூராட்சி மன்ற தலைவருமான கணேஷ் தாமோதரன் ஏற்பாட்டில் குற்றாலத்தில் உள்ள அனைத்து ஆட்டோ நிறுத்தங்களில் உள்ள ஆட்டோக்களில் லோகோ ஸ்டிக்கர்களை மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செல்வமோகன் தாஸ்பாண்டியன் ஒட்டி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்,

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக அவைத்தலைவர் சண்முகசுந்தரம், பொதுக் குழு உறுப்பினர் கசமுத்து, மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் கார்த்திக் குமார், டாக்டர் கிருஷ்ணசாமி, நெல்லை முகிலன், தமிழ் என்ற ராமசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் அமல் ராஜ், இருளப்பன், குணம் என்ற உத்திரகுண பாண்டியன், நகர கழக செயலாளர்கள் சுடலை, சங்கர், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சாமி ஆசாரி, ஸ்டீல் மாரியப்பன், சேர்மபாண்டி, ராமசாமி பேரூராட்சி மன்ற துணை தலைவர் தங்கபாண்டியன், பேரூர் கழக துணை செயலாளர் கருப்பசாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி ஜெயகுமார், நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வினிஷ் வார்டு செயலாளர்கள் அருண்ராஜ், மணிகண்டன், சின்னதம்பி, மற்றும் பரமசிவம், மேகலிங்கராஜா, குமார், ஆட்டோ சங்க தலைவர் நாராயணன், சுடலை, துணை தலைவர் பரமசிவன், கருப்பசாமி, செயலாளர் குமார், அசோக்பாபு, மாரியப்பன், பொருளாளர் மாரி, பாலசுப்பிரமணியன், துணை பொருளாளர் துர்காராஜ், மீனாட்சி சுந்தரம், செயற்குழு உறுப்பினர்கள் நேருமணி, அருணாசலம், கிருஷ்ணன், அய்யாகண்ணுராஜா, முகமது அலி, செந்தில்குமார், சேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவன், அய்யப்பன், வைத்திலிங்கம் குமார், கைக்கொண்டார், முத்துக்குமார், அய்யப்பன், சிவ பெருமாள் கே.சாமி, குமாரசாமி, செல்வராஜ், மாரிமுத்து மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# நல்லமணி வித்யாலயா பள்ளியில் யோகாசனப் போட்டி



**தென்காசி,ஜூலை.20-**

பெருந்தலைவர் காமராஜர் 122 வது பிறந்தநாள் விழா மற்றும் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு "யோகாசனப் போட்டிகள்" கொடிக் குறிச்சியில் உள்ள நல்லமணி வித்யாலயா பள்ளியில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.தென்காசி மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு பள்ளி மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர். விழாவிற்கு பள்ளி தாளாளர் மணிமாறன் தலைமை தாங்கி யோகாசனத்தின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு விளக்கி சிறப்புரை ஆற்றியதோடு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழும் பரிசும் வழங்கினார்.யோகாசனப் போட்டிகளை பள்ளி முதல்வர் டேவிட் ம எழில்வாணன் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர் ஜுடித் ஏற்பாடு செய்திருந்தனர்.

# தென்காசி மாவட்ட மனிதநேய மக்கள் கட்சியின் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் நியமனம்





**தென்காசி ஜூலை.20:**

தென்காசி மாவட்ட மனிதநேய மக்கள் கட்சியின் பூத் கமிட்டி அமைப்பது தொடர்பான பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு மனிதநேய மக்கள் கட்சி தயாராகி வருகிறது. இதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்ட சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட நகர, பேரூர், கிளைகழக அமைப்புகளுக்கு பூத்கமிட்டி அமைப்பது தொடர்பான பொறுப்பாளர்களாக தென்காசி கொலம்பஸ் மீரான், அச்சன்புதூர் அகமது அலி ரஜாய் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட, நகர, பேரூர், கிளையின் கட்சி நிர்வாகிகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிடுமாறு மாவட்ட தலைவர் நயினார் முகம்மது தெரிவித்துள்ளார்.

# வடகரை ஜாய் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி




**தென்காசி ஜூலை.20:**

வடகரை ஜாய் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் போதை விழிப்புணர்வு பேரணியை திட்ட இயக்குநர் கார்த்திகை கணபதி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மீரான் முகைதீன், அச்சன்புதூர் காவலர் தலைமையில் பேரணி நடத்தனர். பேரணி பள்ளியிலிருந்து தொடங்கி வடகரை எல்லை வரை நடந்தது. பள்ளி தாளாளர் சாலமோன், ஜெயா சாலமான், இயக்குநர் அகஸ்டின் ஜோசப், பள்ளி முதல்வர் ஜோதி ஆகியோர் போதை விழிப்புணர்வு பற்றி மாணவ, மாணவிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறி இப் பேரணியை துவக்கி வைத்தனர்.

# வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் செவிலியர் கல்லூரி மண்டல அளவில் வெற்றி பெற்று முதலிடம்

**தென்காசி ஜூலை.20:**

வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் செவிலியர் கல்லூரியில் இருந்து மண்டல அளவில் நடைபெற்ற செவிலியர் கல்லூரிகளுக்கு இடையே ஆன இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டமைப்பு,மண்டல அளவிலான மாநாடு தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர் அருகே உள்ள கே ராமச்சந்திரன் நாயுடு நர்சிங் கல்லூரியில் நடைபெற்றது . அதில் தென்காசி,திருநெல்வேலி, தூத்துக்குடி,மாவட்டங்களில் உள்ள 27 செவிலியர் கல்லூரி மாணவ மாணவியர்கள் பங்கு பெற்றுள்ளனர். அம்மாநாட்டில் கோலம், மருதாணி, முகத்தில் வண்ணம் பூசுதல், பென்சில் ஓவியம் , கட்டுரை,வண்ண ஓவியம், சிகை அலங்காரம் ,சுவரொட்டி, காய்கறி செதுக்குதல், காமெடி ,பாட்டு, நடனம் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றுள்ளன.அதில் நடனப் போட்டியில் வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் செவிலியர் கல்லூரி மாணவிகள் அபார வெற்றி பெற்று முதலிடம் பெற்றுள்ளனர். முதல் பரிசு வென்ற மாணவிகளை கல்லூரியின் தாளாளர் முருகேசன் மற்றும் கல்லூரி முதல்வர் .சத்யபிரியா ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர். உடன் அக்கல்லூரியின் ஆசிரியை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி கணிதம் ஒலிம்பியாட் தேர்வில் தேசிய அளவில் சாதனை



**குற்றாலம் ஜூலை.20:**

அறிவியல் ஒலிம்பியாட் நிறுவனம் பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் கணிதம் ஒலிம்பியாட் தேர்வில் மண்டல அளவில் நடத்தியது.இதில் பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கேத்லின் லொரிட்டா 14வது தரவரிசை, முகில் தர்ஷன் 14வது தரவரிசையிலும் மற்றும் ஸ்ரீ பிரணவ்12வது தரஅளவிலும் வெற்றி பெற்று சாதனை படைத்தனர் . ஒலிம்பியாட் தேர்வில் தேசிய அளவில் சாதனைப் படைத்த மாணவர்களுக்கு அறிவியல் ஒலிம்பியாட் நிறுவனம் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கிப் பாராட்டியது. கணிதம் ஒலிம்பியாட் தேர்வில் தேசிய அளவில் சாதனைப் படைத்த மாணவர்களுக்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், முதல்வர் வனிதா மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறை கூட்டமைப்பு துவக்க விழா




**கோவில்பட்டி, ஜூலை 20**

நேஷனல் பொறியியல் கல்லூரியில், 2025-2026-ம் கல்வி ஆண்டிற்கான மின்னணு மற்றும் தொடர்பு பொறியியல் துறை கூட்டமைப்பின் தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நெதர்லாந்து, மாஸ்ட்ரிக்ட் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளரும், கல்லூரியின் முன்னாள் மாணவியுமான சுபாஷினி சங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, துறை சார்ந்த மேற்படிப்பிற்கான வாய்ப்புகள் மற்றும் பல்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கி கூறினார். மேலும், வருங்கால பொறியாளர்கள் திட்டம் சார்ந்த பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, கூட்டமைப்பின் கடந்த ஆண்டின் செயல்பாடுகளைப் பற்றியும், நடப்புகல்வியாண்டில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் 2025-2026 கல்வியாண்டிற்கான கூட்டமைப்பின் மாணவ நிர்வாகக்குழு உறுப்பினர்களை அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

இதில் துறை மாணவ - மாணவிகள் சுமார் 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



**தென்காசி கிழக்கு ஒன்றியம் காசி மேஜர்புரம் கிளை அவைத்தலைவர் லெட்சுமணனுக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் நிதி உதவி வழங்கினார். உடன் தென்காசி தொகுதி பார்வையாளர் டாக்டர். கலைக் கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் கென்னடி, செங்கோட்டை நகரச் செயலாளர் ஆ.வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா, தலைமை கழக பேச்சாளர் இஸ்மாயில் கலந்து கொண்டனர்.**

# கலெக்டரிடம் கிருஷ்ணமுரளி எம்.எல்.ஏ.மனு



தென்காசி ஜூலை ; 20 -

கனிமவள கடத்தல், அமைச்சர் அனுப்பிய கம்பெனி ஆட்கள் வாகன சோதனை, அங்கன்வாடி பணிக்கு வசூல் வேட்டை குறித்து தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்

தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா மாவட்ட ஆட்சியரிடம் மனு ஒன்றை அளித்துள்ளார் அந்த மனுவில் மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கு சட்டவிரோதமாக டன் கணக்கில் கனிம வளங்கள் தினந்தோறும் கடத்தப்படுவதால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறு பலமுறை மனு அளித்தும், நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான கனிம வளத்தை முறைகேடாக எடுத்துச் செல்லும் வாகனங்களைக் கூட தடுக்க எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. கனிமவள லாரிகள் நேரக் கட்டுப்பாடுகள் எதையும் கடைப்பிடிப்பதும் இல்லை.

நிலைமை இப்படியே தொடர்ந்தால் மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் வருத்தப்படுகின்றனர். இதனிடையே கம்பெனி ஆட்கள் என்று சொல்லிக்கொண்டு அமைச்சர் அனுப்பியதாக வந்து கனிமவள வாகனங்களை மறித்து சிலர் பிரச்சினையில் ஈடுபடுவதாகவும் சமூக வலைதளங்களில் வீடியோ பரவி வருகிறது. இதை போன்று நடைபெறும் சம்பவங்களால் பொதுமக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. எனது தொகுதியில் நடைபெறும் இதுபோன்ற முறைகேட்டை தடுக்க வேண்டியது எனது கடமை என்பதால் விதிகளை மீறி கனிம வளங்களை ஏற்றிச்செல்லும் லாரிகளை பொதுமக்களின் துணையுடன் சிறைப்பிடித்து காவல்துறை மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் போராட்டத்தை முன்னெடுப்பதை தவிர வேறு எந்த வழியிலும் இதை தடுக்க முடியாது என்று கருதுகிறேன்.

கேரளாவில் இருந்து கனிமவளங்கள் ஏற்றிச்செல்ல வரும் வாகனங்களுக்கு E-Pass முறையை அமுல்படுத்தினால் ஒரே அனுமதி சீட்டினை பலமுறை பயன்படுத்தி முறைகேடாக கனிமவளங்கள் கடத்தப்படுவதை கட்டுப்படுத்த முடியும்.வாகனங்களை சிறைப்பிடிக்கும் போராட்டத்தை தொடங்குவதற்கு முன்பாக, இறுதியாக ஒருமுறை முறைகேடாக கனிமவளம் அள்ளிச் செல்வதை தடுத்து நிறுத்த தாங்கள் உறுதியான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன். அதே போல மாவட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட இருப்பதாகவும் அதற்கு லட்சக்கணக்கில் பணம் வசூலிக்கப்படுவதாகவும் சமூக வலைதளங்களில் செய்திகள் மற்றும் ஆடியோ பரவி வருகிறது. இதன் மூலம் அரசு வேலைகளை பல வருடங்களாக எதிர்பார்த்து காத்திருக்கும் ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு கிடைக்க முடியாமல் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள், ஒரு சில அரசு அதிகாரிகள் ஒவ்வொரு பணியிடத்திற்கும் இத்தனை லட்சங்கள் என்று முன்கூட்டியே முடிவு செய்து வசூல் வேட்டையில் ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் வருகின்றன. எந்தவித அரசியல் தலையீடும் இல்லாமல் நியாயமான முறையில் தகுதியான ஆட்களுக்கு பணியிடங்களை வழங்க தாங்கள் உறுதியான நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன் என்று கூறப்பட்டுள்ளது, இந்த நிகழ்வின் போது குற்றாலம் பேரூர் அதிமுக செயலாளரும் பேரூராட்சி மன்ற தலைவருமான கணேஷ் தாமோதரன் உடனிருந்தார்.

# நல்லமணி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா

**தென்காசி ஜூலை.20:**

தென்காசி மாவட்டம், நல்லமணி நகர், நல்லமணி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களால் பெருந்தலைவர் காமராஜரின் 123வது பிறந்த நாள் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளியில் நடனம், நாடகம், கட்டுரைப்; போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் பாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.

வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## தவறிவிட்டது

நான் கடந்த 30.06.2025 அன்று பாவூர்சத்திரம் பஸ்நிலையத்தில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்த போது எனது கையிலிருந்த என்னுடைய பாவூர்சத்திரம் டி.பி.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ் அசல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

த.இசக்கிமுத்து, த/பெ.தங்கராஜ்
நயினார் கோவில் தெரு,
பூலாங்குளம் - 627808
தென்காசி மாவட்டம்
செல்: 7358366264

## கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் தென்காசி

RDOTKS/இ.ப.வ.எண்.150/2025

சாகுல் கமீது
S/o. முகம்மது இப்ராஹிம்,
67/50, லெப்பைசாபுரம் தெரு,
புளியங்குடி - 627855
கடையநல்லூர் வட்டம்
.... மனுதாரர்

-எதிர்-

வட்டாட்சியர், கடையநல்லூர்
..... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

எனது தந்தை முகம்மது இப்ராஹிம், S/o. முகம்மது இஸ்மாயில் என்பவர் கடந்த 10-05-1981 அன்று வீடு, கதவு எண்.67/50, லெப்பைசாபுரம் தெரு, புளியங்குடி என்ற முகவரியில் வைத்து எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொளள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சாகுல் கமீது
புளியங்குடி

## அறிவிப்பு

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் சேரன்மகாதேவி.
பிறப்பு/இறப்பு பதிவு அ4/சி.ப. எண் 726/2024

ராபின்சிங் த/பெ ராஜாமணி
25 A காமராஜர் தெரு எடுப்பூர்
மூலைக்கரைப்பட்டி
நாங்குநேரி தாலுகா திருநெல்வேலி
மாவட்டம் 627-354

மனுதாரர் , ராபின் சிங் என்கிற நான் எனது பாட்டி ராகேல் என்பவர் மேற்படி ஊரில் 09.08.1965 அன்று இறந்தார். என்பதை விழிப்புணர்வு இல்லாத காரணமாக இறப்பை பதிவு செய்யப்படவில்லை. எனவே எனது பாட்டி இறப்பை பதிவு செய்து சான்று கேட்டு விண்ணப்பித்துள்ளேன். மேற்படி இறப்பு சான்று சமர்பிக்க தேவைப்படுவதால் மேற்படி அலுவலகத்தில் எனது மனுவில் தெரிவித்துள்ள இறப்பு சான்று குறித்து ஆட்சேபணை இருந்தால் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ இந்த விளம்பரம் வெளியிட்ட 15 தினங்களுக்கள் தெரிவிக்கலாம். தவறினால் இந்த மனு மீது உரிய சான்றினை வழங்க மேற்படி அலுவலகத்தில் எற்கப்பட்டுவிடும் என தெரிவிக்கப்படுகிறது .

மனுதாரர்.
ராபின் சிங், த/பெ ராஜாமணி
25 A காமராஜர் தெரு எடுப்பூர்
மூலைக்ரைப்பட்டி
திருநெல்வேலி.627354
செல்.7305398341

### வங்கதேசம் செல்ல பி.சி.சி.ஐ. மறுப்பு..?

# ஆசிய கோப்பை தொடர் நடைபெறுவதில் சிக்கல்



**மும்பை, ஜூலை 20-**

ஆலோசனை கூட்டத்திற்காக இந்திய கிரிக்கெட் வாரியம் (பி.சி.சி.ஐ), வங்காளதேசம் செல்ல மறுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**இந்தியா சாம்பியன்...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. ஐ.சி.சி. தொடர்களில் ஆசிய அணிகள் சிறப்பாக செயல்படும் பொருட்டு இந்த தொடர் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலால் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆசிய கோப்பை தொடரில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

**டாக்காவில்...**

இம்முறை இந்த தொடர் டி20 வடிவில் நடைபெற உள்ளது. இருப்பினும் இதற்கான அட்டவணை அல்லது எந்தெந்த மைதானங்களில் போட்டி நடைபெறும் என்ற எந்த ஒரு தகவலும் இதுவரை வெளியிடப்பட வில்லை. இந்த தொடருக்கான ஆலோசனை கூட்டம் வங்காளதேச தலைநகர் டாக்காவில் வரும் 24-ம் தேதி நடைபெறும் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மொஷின் நக்வி அறிவித்துள்ளார்.

**பி.சி.சி.ஐ. மறுப்பு...**

இதனிடையே இந்தியா-வங்காளதேசம் இடையே இடையேயான உறவில் சமீபகாலமாக கசப்புணர்வு அதிகரித்துவரும் நிலையில் இந்திய கிரிக்கெட் வாரியம் (பி.சி.சி.ஐ), வங்காளதேசம் செல்ல மறுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. எனவே ஆலோசனை கூட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி மொஷின் நக்வியிடம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் மொஷின் நக்வியிடம் இதுவரை எந்த பதிலும் வரவில்லை என கூறப்படுகிறது.

**சிக்கல்...**

இலங்கை, ஓமன் மற்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியங்களும் இந்தியாவை ஆதரித்துள்ளன. அதிகரித்து வரும் எதிர்ப்புகள் இருந்தபோதிலும், டாக்காவில் கூட்டத்தை நடத்துவதில் மொஷின் நக்வி பிடிவாதமாக இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் ஆசிய கோப்பை நடைபெறுவதில் சிக்கல் எழுந்துள்ளது.

### அய்யப்பனின் பஞ்சலோக சிலையை நிறுவ

# ஈரோட்டை சேர்ந்தவருக்கு தடை விதித்து கேரள ஐகோர்ட் உத்தரவு

**திருவனந்தபுரம், ஜூலை 20-**

சபரிமலை அய்யப்பனின் பஞ்சலோக சிலையை தனிநபர் நிறுவ கேரள ஐகோர்ட் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. மேலும், அய்யப்பன் சிலையை நிறுவ கட்டுப்பாடு விதித்ததோடு, இதன் பேரில் நன்கொடை வசூலிக்கவும் தடை விதித்துள்ளது.

தமிழ்நாடு ஈரோட்டை சேர்ந்த டாக்டர் ஒருவர் சபரிமலையில் அய்யப்பனின் 2 அடி உயரம், 108 கிலோ எடை கொண்ட பஞ்சலோக சிலையை நிறுவ நன்கொடை வசூல் செய்து வந்தார். இதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த சபரிமலை சிறப்பு கமிஷனர், சிலை அமைக்க தடை விதிக்க கோரி கொச்சியில் உள்ள கேரள ஐகோர்ட்டில் அறிக்கை சமர்ப்பித்தார்.

இது தொடர்பாக விசாரித்த ஐகோர்ட் சபரிமலையில் அய்யப்பன் சிலையை நிறுவ கட்டுப்பாடு விதித்ததோடு, இதன் பேரில் நன்கொடை வசூலிக்கவும் தடை விதித்து உத்தரவிட்டார். மேலும் அந்த தீர்ப்பில் சபரிமலை கோவிலில் அய்யப்பன் சிலை நிறுவ தனிநபர் யாருக்கும் அனுமதி வழங்கவில்லை என்றும், இதன் பேரில் நன்கொடை வசூலிக்க யாருக்கும் அனுமதி வழங்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் இதுதொடர்பான அறிவிப்பை ஆன்லைன் தரிசன முன்பதிவு இணையதள பக்கத்தில் வெளியிட திருவிதாங்கூர் தேவஸ்தானத்திற்கு கேரள ஐகோர்ட் உத்தரவிட்டு உள்ளது.



**தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று நாகை மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார்.**

### இங்கி.க்கு எதிரான 4-வது டெஸ்ட்:

# கருண் நாயர் இடம் பெறுவாரா? உதவி பயிற்சியாளர் விளக்கம்

**மான்செஸ்டர், ஜூலை 20-**

4வது டெஸ்ட் போட்டியில், கருண் நாயர் இடம் பெறுவாரா என்பது குறித்து இந்திய அணியின் உதவி பயிற்சியாளர் விளக்கமளித்துள்ளார்.

**பின்தங்கிய இந்தியா...**

இந்தியா- இங்கிலாந்து இடையில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் இந்தியா 1-2 என பின்தங்கிய நிலையில் உள்ளது. முதல் டெஸ்டில் சாய் சுதர்சன் 3ஆவது இடத்தில் களம் இறங்கினார். அவர் சிறப்பாக விளையாடாததால், கருண் நாயர் 3ஆவது இடத்தில் களம் இறக்கப்பட்டார். ஆனால் 20 முதல் 30 என ரன்கள் அடிக்கிறார். பெரிய அளவில் ஸ்கோர் செய்ய முடியவில்லை. இதனால் கருண் நாயர் 4ஆவது டெஸ்ட் போட்டிக்கு தேவையா? என்ற கேள்வி எழுந்து வருகிறது.

**எதிர்பார்க்கிறோம்...**

இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்து பேசிய இந்திய கிரிக்கெட் அணியின் உதவி பயிற்சியாளர் ரியான் டென் டோஷேட், "கருண் நாயர் சிறப்பான பங்களிப்பைத் தருவதாக நாங்கள் உணர்கிறோம். 3-வது இடத்தில் களமிறங்கும் வீரரிடமிருந்து அதிக ரன்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனாலும், நமக்குப் பலனளிக்காத சிறிய விஷயங்கள் சரிசெய்யப்படும்" என்று தெரிவித்தார்.

# நீதிபதி யஷ்வந்த் பதவி நீக்கத்துக்கு அனைத்துக்கட்சிகளும் ஆதரவு

### மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தகவல்

**புதுடில்லி, ஜூலை 20-**

"பண மூட்டை பிரச்னையில் நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி நீக்கத்துக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கின்றன" என பார்லிமென்ட் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்துள்ளார்.

இது குறித்து கிரண் ரிஜ்ஜூ நிருபர்களுக்கு அளித்த பேட்டி: பண மூட்டை பிரச்னையில் நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி நீக்கத்தை அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. அனைத்து அரசியல் கட்சிகளும் அவர் மீதான பதவி நீக்க தீர்மானத்திற்கு முழு ஆதரவு அளிக்கின்றனர். நீதித்துறை ஊழல் ஒரு தீவிரமான மற்றும் மிக முக்கிய பிரச்னை. நீதிபதி வர்மாவை நீக்குவதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற காங்கிரஸ் உட்பட அனைத்து கட்சிகளும் முழு முயற்சி உடன் இருக்கிறது.

நீதித்துறையில்தான் மக்களுக்கு நீதி கிடைக்கும். நீதித்துறையில் ஊழல் இருந்தால், அது அனைவருக்கும் ஒரு தீவிர கவலை. அதனால்தான் நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் கையெழுத்திட வேண்டும் என வலியுறுத்தினோம். எந்தவொரு கட்சியும் ஊழல் நிறைந்த நீதிபதிக்கு ஆதரவாகவோ அல்லது ஊழல் நிறைந்த நீதிபதியைப் பாதுகாப்பதாகவோ தெரியவில்லை.

அவர்கள் இந்த விஷயங்களை எப்படி கையாள வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நீதித்துறையில் ஊழல் என்று வரும் போது, நாம் ஒன்றாக நிற்க வேண்டும். எந்தவொரு பாரபட்சமான மனப்பான்மையும் இருக்க முடியாது, அதை ஒரு அரசியல் பிரச்னையாக மாற்றக் கூடாது. இந்த பிரச்னையில் ஒற்றுமை மிகவும் அவசியம். இவ்வாறு கிரண் ரிஜ்ஜூ தெரிவித்தார்.

# மக்கள் விரும்பிய அரசாக இருந்தது அ.தி.மு.க. அரசு

### நாகையில் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு

**நாகப்பட்டினம், ஜூலை 20-**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2 -வது நாளாக பிரச்சாரம் மேற்கொண்டு வரும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி நாகப்பட்டினம் அவுரி திடலில் பேசியதாவது:- மக்கள் விரும்பிய அரசாக அ.தி.மு.க. அரசு செயல்பட்டது.

மு.க.ஸ்டாலின் தமிழக முதல்வராக மக்கள் அமர வைத்தனர். ஆனால் அவர் மக்களைப் பற்றி சிந்திக்காமல், வீட்டு மக்களை மட்டுமே சிந்தித்து அதிகாரம் வழங்கி வருகிறார்.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஸ்டாலின் வந்தார். தெரியுமா? தெரியாது. ஏன் எனில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு முதல்வர் எதையும் செய்யவில்லை. எதாவது செய்து இருந்தால் தானே முதல்வர் வந்தது தெரியும். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு நிறைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. அதனால் தான் நான் நெஞ்சை நிமித்து கொண்டு வந்த பேசுகிறேன். தமிழகத்தில் மு.க.ஸ்டாலின், அவரது மனைவி, மருமகன், மகன் என நான்கு அதிகாரம் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நான்கு அதிகார மையங்களும் 50 மாத காலமாக, தமிழகத்தை ஆட்டி வைக்கின்றனர். 2026ல் நடைபெறும் சட்டப் பேரவைத் தேர்தல் இதற்கு முடிவு கட்டும்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அதிகாரிகள் சுதந்திரத்துடன் செயல்பட்டனர். மக்களுக்கு அனைத்து திட்டங்களும் உடனுக்குடன் கிடைத்தன. ஹைட்ரோ கார்பன் மீத்தேன் போன்ற திட்டங்களால் காவேரி டெல்டா மாவட்டங்கள் பாலைவனம் ஆகும் நிலை ஏற்பட்ட போது விவசாயிகளின் கோரிக்கை ஏற்ப ஒன்றிய அரசு உடன் பேச்சுவார்த்தை நடத்தி டெல்டா மாவட்டங்களை பாதுகாப்பு மண்டலமாக சட்ட வழியில் அறிவித்தது அ.தி.மு.க. அரசு சாதனையாகும்.

ஒவ்வொரு ஆண்டும் பருவம் தவறி மழை பெய்யும் போது விவசாயிகள் கடும் பாதிப்பை சந்திக்கின்றனர். இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் கோதாவரி காவிரி ஆறுகள் இணைப்பு திட்டத்தை நிறைவேற்ற அ.தி.மு.க. நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தால் தற்போதும் இத்திட்டம் கிடப்பில் உள்ளது. காவிரி நீரை நம்பி 20 மாவட்டங்கள் உள்ளன.அனைத்து மாவட்டங்களுக்கும் சுத்தமான குடிநீர், விவசாயத்திற்கு சுத்தமான நீர் ,கடைமடை வரை எளிதாக தண்ணீர் கிடைக்க, நடவடிக்கை எடுக்கும் வகையில் காவிரி நடை வழி திட்டம் தீட்டப்பட்டது. இது தொடர்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடி இடம் தெரிவித்து குடியரசு தலைவர் உரையில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால் திமுக ஆட்சியில் இத்திட்டம் குறித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் சட்டப்பேரவையில் இது குறித்து கேட்ட போது கிண்டலும் கேலியும் செய்யப்பட்டது. தற்போது ஒன்றிய அரசு திட்டத்திற்கு ரூ.11,500 கோடி நிதி ஒப்புதல் அளித்து முதற்கட்டமாக ரூ.990 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடைமடை வரை சுத்தமான நீர் கிடைக்க இத்திட்டத்தை கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசுதான்.

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கடைமடை செல்வதற்கு 25 சதவீதம் வீணாகிறது இதை தடுக்கும் வகையில் 36 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் கால்வாய்கள் கான்கிரீட் அமைக்க அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்தது ஆட்சி மாற்றம் காரணமாக இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தற்போது கடைமடையில் தண்ணீர் கிடைக்கவில்லை என விவசாயிகள் புலம்புவது கேட்க முடிகிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்தால் கடைமடை வரை எளிதாக தண்ணீர் கிடைத்திருக்கும். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டு முறை பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது கட்டுப்பாடு இன்றி உரங்கள் விவசாயத்திற்கு வழங்கப்பட்டது.ஆனால் தற்போதைய திமுக ஆட்சியில் உரத் தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்தியாவிலேயே அதிக பயிர் காப்பீடு ரூ.12 ஆயிரம் கோடி வழங்கியது அ.தி.மு.க. அரசு தான். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட விலையில்லா மாடு, ஆடு, கோழி வழங்கும் திட்டங்கள், திருமண உதவித் தொகை திட்டம், தாலிக்கு தங்கம் திட்டம், அம்மா இரு சக்கர வாகன திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன.

அ.தி.மு.க. ஆட்சியின் போது கொரோனா பாதிப்பால் எந்த வருமானமும் அரசு இல்லை அப்போது கூட விலைவாசி உயர்வை கட்டுக்குள் அரசு வைத்திருந்தது ஆனால் திமுக அரசுக்கு எந்த வித பிரச்சனையும் இல்லாத நிலையில் கூட அவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வருமானம் குறைந்த விலைவாசி உயர்ந்துள்ளது பொதுமக்களை கடுமையாக பாதித்து வருகிறது.

தமிழகத்தில் திறனற்ற முதல்வராக பொம்மை முதல்வராக ஸ்டாலின் ஆட்சி செய்கிறார். நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாத முதல்வராக மு க ஸ்டாலின் உள்ளார் என்றார்.

# சிறந்த கேப்டனாக வர கில்லுக்கு முழு தகுதி: கிரிஸ்டன் புகழாரம்

**லண்டன், ஜூலை 20-**

இந்திய அணியின் சிறந்த கேப்டனாக வருவதற்கான அத்தனை தகுதிகளும் சுப்மன் கில்லிடம் இருக்கிறது என கேரி கிரிஸ்டன் தெரிவித்துள்ளார்.

**இங்கி. முன்னிலை...**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் கொண்ட ஆண்டர்சன்-டெண்டுல்கர் டிராபியில் விளையாடி வருகிறது. முதல் 3 டெஸ்ட் முடிவில் இங்கிலாந்து 2-1 என முன்னிலை வகிக்க 4வது டெஸ்ட் மான்செஸ்டரில் வரும் 23ம் தேதி தொடங்க உள்ளது. ரோகித் சர்மா, விராட் கோஹ்லி இல்லாத நிலையில் சுப்மன்கில் தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சிறப்பாகவே ஆடி வருகிறது.

**பாராட்டு...**

கேப்டன் கில் ஒரு இரட்டைசதம், 2 சதம் என 607 ரன் குவித்து டாப்பில் உள்ளார். அவரின் கேப்டன்ஷிப் செயல்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர். இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், ஐ.பி.எல்.லில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் ஆலோசகருமான தென்ஆப்ரிக்காவைச் சேர்ந்த கேரி கிரிஸ்டன், சுப்மன் கில்லின் கேப்டன்சி செயல்பாடு பற்றி பேட்டி அளித்துள்ளார்.

**தவறான செயல்...**

அதில், சுப்மன் கில்லின் கேப்டன்சியை தற்போதே மதிப்பிடுவது மிகவும் தவறான செயல். ஏனென்றால் சுப்மன் கில் 3 போட்டிகளில் மட்டுமே இந்திய அணியை வழிநடத்தி இருக்கிறார். இந்த 3 போட்டியிலேயே கில் தனது திறமையை நிரூபித்துவிட்டார். பேட்டிங், பவுலிங், பீல்டிங், திட்டம், எதிரணியின் பலம், பலவீனம் என்று கேப்டன்சி என்பது பல்வேறு விஷயங்களைச் சார்ந்த ஒன்று. கில்லிடம் கிரிக்கெட் பற்றிய சிறந்த கற்றல் இருக்கிறது. களத்தில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டே இருப்பார். சிறந்த பேட்ஸ்மேனும் கூட. கேப்டனாக வெல்ல வேண்டுமென்றால், பல்வேறு விஷயங்களில் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

**அட்டகாசமாக...**

குறிப்பாக வீரர்களை பயன்படுத்துவதில் நிபுணராக இருக்க வேண்டும். அது தான் தலைமைக்கான முக்கிய பண்பு. என்னைப் பொறுத்தவரை டோனி அதில் வல்லவர். டோனி அளவிற்கு சுப்மன் கில்லால் வீரர்களை கையாள தெரிந்தால், அட்டகாசமாக இருக்கும். இந்திய அணியின் சிறந்த கேப்டனாக வருவதற்கான அத்தனை தகுதிகளும் சுப்மன் கில்லிடம் இருக்கிறது.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருப்பதி கோவிலில் 24 மணிநேரத்துக்கு மேல் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்

**திருப்பதி, ஜூலை 20-**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த சில நாட்களாக லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்து வருகின்றனர். நேற்று காலையில் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. பக்தர்கள் தங்கி தரிசனத்திற்கு செல்லும் வைகுந்தம் அறைகள் மற்றும் நாராயணகிரி கொட்டைகைகளில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. திருப்பதி மலையில் எங்கு பார்த்தாலும் பக்தர்கள் அதிக அளவில் காணப்படு கின்றனர். லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்ததால் தங்கும் அறைகள் கிடைக்காமல் திறந்த வெளியில் உணவு சாப்பிட்டு தூங்கினர்.

தற்போது திருப்பதியில் அடிக்கடி மழை பெய்து வருவதால் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அவதி அடைந்தனர். இலவச தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள சீலா தோரணம் வரை வரிசையில் காத்திருந்தனர். 24 மணிநேரத்துக்கு மேல் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். வார இறுதி விடுமுறை நாட்களில் அதிக அளவு பக்தர்கள் தரிசனத்திற்கு வருவதால் இலவச தரிசன டிக்கெட்டுகளை கூடுதலாக வழங்க வேண்டும் என பக்தர்கள் தேவஸ்தான அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பதியில் நேற்று முன்தினம் 73,093 பேர் தரிசனம் செய்தனர். 31,570 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.21 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது.

# சோதனையே இனிதான்: சேப்பல்

**லண்டன், ஜூலை 20-**

இந்திய அணியின் கேப்டன் ஷூப்மன் கில்லுக்கு உண்மையான சோதனை மான்செஸ்டர் டெஸ்ட்டிலிருந்து தொடங்கவுள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் கிரேக் சேப்பல் தெரிவித்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி அண்மையில் நிறைவடைந்தது. இந்தப் போட்டியில் இந்திய அணி 22 ரன்கள் வித்தியாசத்தில் போராடி தோல்வியடைந்தது. இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த போட்டி மான்செஸ்டரில் வருகிற ஜூலை 23 ஆம் தேதி முதல் தொடங்குகிறது.

**கில் மீது கவனம்...**

இன்னும் மூன்று நாள்களில் மான்செஸ்டர் டெஸ்ட் தொடங்கவுள்ள நிலையில், இந்திய அணியின் கேப்டன் ஷூப்மன் கில்லுக்கு உண்மையான சோதனை மான்செஸ்டர் டெஸ்ட்டிலிருந்து தொடங்கவுள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் கிரேக் சேப்பல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்காக இந்திய அணி தயாராகி வருகிறது. அனைவரது கவனமும் இளம் கேப்டன் ஷூப்மன் கில் மீது திரும்பியுள்ளது.

**உண்மையான சோதனை...**

இளம் வீரரான ஷூப்மன் கில் பேட்டிங்கில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவரது தலைமைப் பண்பும் பெரிய அளவில் குறைகூறும் அளவுக்கு இல்லை. ஆனால், மான்செஸ்டர் டெஸ்ட்டிலிருந்துதான் ஷூப்மன் கில்லுக்கான உண்மையாக சோதனை தொடங்குகிறது. டெஸ்ட் போட்டிகளுக்கான கேப்டனாக ஷூப்மன் கில் எந்த அளவுக்கு தயாராகியுள்ளார் என்பது முடிவு செய்யப்படுவதற்கான நேரம் உருவாகியுள்ளது.

**முக்கியமான முடிவுகள்...**

இந்திய அணி எப்படி இருக்க வேண்டும் என்பதை ஷூப்மன் கில் முடிவு செய்ய வேண்டும். கேப்டனுக்கான உண்மையான வேலை வந்துவிட்டது. அணிக்காக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் ஷூப்மன் கில் இருக்கிறார். இந்திய அணியின் ஃபீல்டிங் சரிசெய்யப்பட வேண்டும். சிறந்த அணிகள் ஃபீல்டிங்கிலும் சிறப்பாக செயல்படுவார்கள். அவர்கள் எளிதில் ரன்களை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். கேட்ச் வாய்ப்பினை அவர்கள் தவறவிட மாட்டார்கள்.

**வல்லவர்களாக...**

சிறப்பான இந்திய அணியை தேர்வு செய்ய வேண்டிய இடத்தில் ஷூப்மன் கில் இருக்கிறார். அணிக்காக வீரர்கள் என்ன செய்ய வேண்டும், தனிப்பட்ட முறையில் அவர்களது பொறுப்பு என்ன என்பதை வீரர்கள் கண்டிப்பாக தெரிந்துகொள்ள வேண்டும். அணியில் உள்ள வீரர்களிடம் கேப்டன் தொடர்ந்து தகவல்களை பரிமாறிக் கொள்ள வேண்டும். சிறந்த தலைவர்கள் தொடர்ச்சியாக தகவல்களை பரிமாறுவதில் வல்லவர்களாக இருப்பார்கள். அணியில் உள்ள வீரர்களுக்கு கேப்டன் ஊக்கமளிப்பவராகவும், நம்பிக்கையளிப்பவராகவும் இருக்க வேண்டும் என்றார்.

## ரிஷப் வேண்டாம்: ரவி சாஸ்திரி

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. 3-வது டெஸ்ட் போட்டியின் போது ரிஷப் பண்ட் கைவிரல் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக விக்கெட் கீப்பிங் பணியை மேற்கொள்ளாமல் இருந்தார். ஆனாலும் வலியை தாங்கிக் கொண்டு இரண்டு இன்னிங்ஸ்சிலும் பேட்டிங் செய்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்து இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கூறுகையில்:- ரிஷப் பண்டை நான் ஒரு ஸ்பெஷலிஸ்ட் பேட்ஸ்மனாக மைதானத்தில் பார்க்க விரும்பவில்லை. ஏனெனில் அவர் முழு நேர பேட்ஸ்மேனாக மட்டுமே விளையாடும் பட்சத்தில் களத்தில் நின்று பீல்டிங்கும் செய்ய வேண்டி இருக்கும். அப்படி அவர் பீல்டிங் செய்யும் பட்சத்தில் அவருடைய காயம் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும். எனவே அடுத்த போட்டியில் அவர் விக்கெட் கீப்பிங் செய்யும் அளவிற்கு பூரண குணமடையவில்லை எனில் அவருக்கு ஓய்வு வழங்கலாம் என்று ரவி சாஸ்திரி கூறினார்.

## அர்ஷ்தீப்க்கு ரகானே கருத்து

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1-2 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் மோதும் 4-வது போட்டி வரும் 23-ம் தேதி மான்செஸ்டரில் தொடங்க உள்ளது. இதனிடையே இந்த மிக முக்கியமான போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விளையாடுவாரா? என்பதில் பெரிய கேள்வி நிலவுகிறது.

இந்நிலையில் இது குறித்து பேசிய ரகானே கூறுகையில், "பும்ரா விளையாடவில்லை என்றால், அர்ஷ்தீப்தான் சரியான வீரர். நான் அப்படித்தான் நினைக்கிறேன். ஏனென்றால் இங்கிலாந்தில், பந்தை இருபுறமும் ஸ்விங் செய்யக்கூடிய இடது கை வேகப்பந்து வீச்சாளர் தேவை, வித்தியாசமான கோணத்தில் பவுலிங் செய்யக்கூடிய அவரால் இந்திய அணிக்கு உதவ முடியும். எனவே, பும்ரா விளையாடவில்லை என்றால், அர்ஷ்தீப் விளையாட வேண்டும்" என்று கூறினார்.

### சென்னை திரு.வி.க. நகரில்

# 6.44 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பள்ளிக்கட்டிடம்: அமைச்சர் அடிக்கல்

**சென்னை, ஜூலை 20-**

சென்னை திரு.வி.க.நகரில் ரூ.6.44 கோடியில் பள்ளிக் கட்டிடம்: அமைச்சர் சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்


சென்னை திரு.வி.க.நகரில், ரூ.11.77 கோடி மதிப்பீட்டில் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம், மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை அமைச்சர் சேகர்பாபு நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான சேகர்பாபு இன்று (நேற்று) ரூ.11.77 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 73 மற்றும் வார்டு 75-ல் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம், மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-73, குக்ஸ் சாலை வாடியா நகர் பகுதியில் ரூ.3.05 கோடி மதிப்பீட்டிலும், வார்டு-75, நம்மாழ்வார் பேட்டை 2-வது தெரு பகுதியில் ரூ.2.28 கோடி மதிப்பீட்டிலும் என இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடத்திற்கான பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து, வார்டு 73, புளியந்தோப்பு அம்மையம்மாள் தெரு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.6.44 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நிலைப் பள்ளிக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இப்பள்ளிக் கட்டிடம் 17,569 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் கட்டிபட்டவுள்ளது. இதில் 19 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, இரண்டு ஆசிரியர் அறை, மேடை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டிப்படவுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அசாருதீன் வீட்டில் திருட்டு



முன்னாள் கேப்டன் அசாருதீனின் வீட்டில் இருந்து பணம் மற்றும் பொருட்கள் திருடுபோயுள்ளது. புனே மாவட்டம் லோனாவாலாவில் உள்ள அவரது பங்களாவில் இருந்து ரூ.50,000 ரொக்கமும், ரூ.7,000 மதிப்புள்ள டிவியும் திருடு போயிருப்பதாக அசாருதீன் புகார் அளித்துள்ளார்.

மேலும், கொள்ளையடித்தவர்கள் வீட்டையும் சேதப்படுத்தியதாக அந்த புகாரில் அவர் தெரிவித்துள்ளார். இந்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ள போலீசார் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சினிமா CINI செய்திகள்

## விஜய் சேதுபதி – நித்யா மேனன் நடிக்கும் ‘தலைவன் தலைவி’



சத்யஜோதி பிலிம்ஸ் டி ஜி தியாகராஜன் வழங்க, செந்தில் தியாகராஜன் - அர்ஜுன் தியாகராஜன் தயாரிப்பில் பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி - நித்யா மேனன் நடித்திருக்கும் படம் தலைவன் தலைவி. இந்த திரைப்படம் ஜூலை 25ம் தேதி திரையரங்குகளில் வெளியாவதை ஒட்டி படக் குழுவினரின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

இதில் படக்குழுவினர் பலரும் கொண்டனர். இந்நிகழ்வில் தயாரிப்பாளர் செந்தில் தியாகராஜன் பேசுகையில், ''மூன்றாவது தலைமுறையாக திரைப்படங்களை தயாரித்து தயாரிப்பாளராக பணியாற்றி வருகிறோம். தொடர்ந்து ஆதரவு அளித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

பின்னர் இயக்குநர் பாண்டிராஜ் பேசுகையில், ஒரு உண்மை சம்பவத்திலிருந்து இந்த கதையை எழுதி இருக்கிறேன். என் மகனுடைய பிறந்தநாள் விழாவிற்காக குல தெய்வ ஆலயத்திற்கு சென்ற போது நான் சந்தித்த இரண்டு கதாபாத்திரங்கள் தான் ஆகாச வீரன் – பேரரசி. ஆகாச வீரன் சிரிக்க வைப்பான்.. அழ வைப்பான்... டார்ச்சர் செய்வான்... இவன் எந்த மாதிரியான கேரக்டர் என்று வரையறுக்க முடியாத ஒருவன். கணவன்- மனைவி சண்டையை டாம் அண்ட் ஜெர்ரி லவ் ஸ்டோரி என்று சொல்லலாம். கணவன் மனைவி சண்டை படம் பார்க்கும் ரசிகர்களுடன் எளிதாக தொடர்பு கொள்ளும் வகையில் விஜய் சேதுபதியும், நித்யா மேனனும் அற்புதமாக நடித்திருக்கிறார்கள் என்றார்.

## ‘வள்ளிமலை வேலன்’ இசை வெளியீட்டு விழா



எம்.என்.ஆர்.பிக்சர்ஸ், எம் நாகரத்தினம் தயாரித்து நடிக்க, எஸ் மோகன் எழுதி இயக்க, கிராமத்துக் கதைக்களத்தில் கமர்ஷியல் படைப்பாக உருவாகியுள்ள படம், வள்ளிமலை வேலன். விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இதில் படக்குழுவினருடன் V சேகர் உள்ளிட்ட திரை பிரபலங்கள் கலந்துகொண்டனர். கிராமத்து பின்னணியில் கமர்சியல் படமாக இப்படத்தை இயக்கியுள்ளார் எஸ் மோகன். மணிகண்டன் ஒளிப்பதிவு செய்துள்ளள இப்படத்துக்கு ஏ கே ஆல்ட்ரின் இசையமைத்துள்ளார்.

விழாவில் இயக்குநர் வி. சேகர் பேசுகையில், இப்போது படம் எடுப்பது பாதி வேலை தான், அதை புரமோட் செய்வது தான் முக்கிய வேலையாக உள்ளது. அதைச் சரியாகச் செய்ய வேண்டும். நாங்கள் படம் எடுக்கும் போது எத்தனை பெரிய படமாக இருந்தாலும் 250 தியேட்டருக்கு மேல் தர மாட்டார்கள், ஆனால் இப்போது கேட்டை திறந்து விட்ட மாதிரி 1000 திரையரங்குகளில் ரிலீஸாகிறது. அப்புறம் எப்படி சின்ன படங்களுக்கு தியேட்டர் கிடைக்கும். இது மாற வேண்டும். படத்தை நல்ல தியேட்டர் பார்த்து ரிலீஸ் செய்யுங்கள் என்றார். இப்படத்தில் எம் நாகரத்தினம் நாயகனாக நடிக்க, இலக்கியா நாயகியாக நடித்துள்ளார். நான் கடவுள் ராஜேந்திரன், செந்தில், செம்புலி ஜெகன், சுரேந்தர், முத்துக்காளை, காவிரி மகிமா, கணபதி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

## ‘டிராகன்’ நூறாவது நாள் வெற்றி விழா



ஏ.ஜி.எஸ். தயாரிப்பில் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில், பிரதீப் ரங்கநாதன், நடிப்பில் வெளியான படம் டிராகன் திரைப்படம் நூறாவது நாளைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் இப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவை படக்குழுவினர் படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் வகையில் ஒருங்கிணைத்திருந்தனர். விழாவில் நடிகர் பிரதீப் ரங்கநாதன் பேசுகையில், ‘லவ் டுடே’ படத்தில் நடித்து முடித்த பிறகு, படம் வெளியாவதற்கு முன் அஸ்வத்திற்கு திரையிட்டு காண்பித்தேன்.

அப்போது அவரிடம் என்னை ஹீரோவாக வைத்து படம் இயக்குவாயா எனக் கேட்டேன். காலம் கனியட்டும் என பதிலளித்தார். நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றுவதற்கு சிறிது கால அவகாசம் ஆகும் என நினைத்தேன். ஆனால் அதனை ஒரே படத்தில் சாதித்து காட்டியது ரசிகர்கள் தான் என்று கூறினார். இதனைத் தொடர்ந்து படத்தின் பிரம்மாண்டமான வெற்றிக்கு உறுதுணையாக இருந்த திரையரங்க அதிபர்கள், விநியோகஸ்தர்கள், பிரதீப் ரங்கநாதன், ஜார்ஜ் மரியான், ரோஹந்த் உள்ளிட்ட நடிகர்கள், இயக்குநர், ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், படத் தொகுப்பாளர் உள்ளிட்ட தொழில்நுட்ப கலைஞர்கள், தயாரிப்பு நிர்வாகிகள், தொழிலாளர்கள் என படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் ‘பன் பட்டர் ஜாம்’



பன் பட்டர் ஜாம் படத்தின் Veo3 AI எனும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளார்.

Veo3 AI என்பது, இயற்கையான தோற்றம் மற்றும் சினிமா தரம் கொண்ட வீடியோக்களை உருவாக்கும் திறமை கொண்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமாகும். முழு படத்தையே கூட ஒரு கம்யூட்டரின் உதவியோடு எடுக்க முடியும்.

பிக்பாஸ் புகழ் ராஜூ, ஆத்யா பிரசாத் மற்றும் பவ்யா திரிகா நடிப்பில் இன்றைய Gen Z தலைமுறை ரிலேஷன்ஷிப்பை நகைச் சுவை ததும்பச் சொல்லும், அழகான டிராமாவாக இப்படம் உருவாகி உள்ளது,.

இறந்தகால வலிகளின் சுமைகளுக்கும், எதிர்காலத்தைப் பற்றிய பயங்களுக்கும் நடுவே ஊசலாடாமல்,

நிதானமாக நின்று நிகழ் காலத்தை புன்னகையோடு எதிர்கொள்ள கற்றுக்கொள்ளும் Gen z இளைஞர்களைப் பற்றிய கதைதான் பன் பட்டர் ஜாம். ஜூலை 18 ஆம் தேதி உலகமெங்கும் இப்படம் வெளியாகிறது.

## டிஜே அருணாச்சலம் நடிக்கும் ‘உசுரே’



ஸ்ரீ கிருஷ்ணா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் உசுரே படத்தின் ட்ரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக இயக்குனர்கள் ஆர்.வி. உதயகுமார், பேரரசு, மிர்ச்சி சிவா மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நடிகர் சிவா பேசியதாவது., இந்த டீமை பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கு, சின்ன டீம்மாக இருந்தாலும் ஒரு நேர்த்தியான டீமா தெரியுது. இந்த டீமோட மேக்கப் சசிகுமார் தான் என்னுடைய மேக்அப் மேன்.. நேஷனல் அவார்டு வின்னர். அவர் இந்த படம் நல்லா வரணும்னு எனக்காக காலையிலேயே வந்து எப்ப போலாம் எப்போ போலாம்னு கேட்கும் போது, இந்த படம் வெற்றி பெறணும்னு இந்த டீம் மொத்தமா சேர்ந்து உழைப்பது தெரியுது என்றார்.

பின்னர் நாயகன் டிஜே அருணாச்சலம் பேசுகையில், அசுரன் என்ற ஒரு படத்தினால் எனக்கு நிறைய சந்தோஷமும், என் வாழ்க்கையும் மாறியது. அந்த ஒரு படத்தை பார்த்து விட்டு வந்து என்னிடம் கதை சொன்ன அனைத்து இயக்குனர்களுக்கும் நன்றி. என்மேல் நம்பிக்கை வைத்த அந்த இயக்குனரில் ஒருவரான நவீனுக்கு நன்றி. சித்தூரில்நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப் பட்ட படம்.. அசுரன் படத்தில் நடித்த கதாபாத்திரத்திற்கு எதிர் மறையான ரோல் இந்த படத்துல எனக்கு. நான் சிம்புவின் ரசிகன். இப்படத்தில் நடிக்கும் பொழுது எனக்கு சிம்பு நடித்த கோவில் படம் தான் நினைவிற்கு வந்தது.. சக்திவேல் கதாபாத்திரத்தை நினைவில் வைத்து தான் இப்படத்தில் நடித்தேன் என்றார்.

## ‘ஜென்ம நட்சத்திரம்’ பட இசை வெளியீட்டு விழா



அமோகம் ஸ்டுடியோஸ் விஜயன் தயாரிப்பில் மணிவர்மன் இயக்கத்தில் தமன் நடிப்பில் உருவாகியுள்ள படம் ’ஜென்ம நட்சத்திரம். ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் வெளியிடும் இப்படம் ஜூலை 18 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்நிலையில் இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் நாயகன் தமன் பேசுகையில், ‘ஜென்ம நட்சத்திரம்’ படம் கிட்டத்தட்ட ‘ஓமன்’ படத்தின் தமிழ் வெர்ஷன் போல இருக்கும். இந்தப் படம் ஸ்பின் ஆஃப் போல அதாவது ப்ரீக்குவலாக இருக்கும். எப்படி ‘ஒரு நொடி’ படத்தின் கிளைமாஸ் ரசிகர்களுக்கு அதிர்ச்சியானதாக இருந்ததோ அதுபோல இந்தப் படத்தின் கிளைமாக்ஸூம் அதிர்ச்சியானதாகவும் கணிக்க முடியாததாகவும் இருக்கும் என்றார்.

பின்னர் இயக்குநர் மணிவர்மன் பேசுகையில், “’ஒரு நொடி’ படம் பார்த்த பிறகு விஜயன் சார்தான் ‘ஜென்ம நட்சத்திரம்’ படத்திற்கான வாய்ப்பு கொடுத்தார். ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் இந்தப் படத்தை வெளியிடுவதற்கு நன்றி. 29 இரவுகள் படப்பிடிப்பு நடத்தி இருக்கிறோம். ஜூலை 18 அன்று வெளியாகும் இப்படத்துக்கு உங்கள் ஆதரவு தேவை என்றார்

## சிவகங்கை, தேவகோட்டையில்
## பள்ளி மாணவர்களுக்கான இணைய வழி போட்டிகள்



**தேவகோட்டை, ஜூலை 20-**

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம், சமூக வலைதளங்கள் வாயிலாக இணையம் வழியாக நடைபெற்ற என் பள்ளி என் பெருமை என்ற தலைப்பில் ரீல்ஸ் , கவிதை ,பேச்சு,ஓவிய போட்டிகளில் பங்கேற்றனர்.

கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு , செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம், சமூக வலைதளங்கள் வாயிலாக பல்வேறு போட்டிகள் இனையம் வழியாக பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. இதில், மாணவர்களிடம் தமிழக அரசின் மாணவர்கள் நலன் தொடர்பான பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்பாக போட்டிகள் நடத்தப்பட்டன.

அதன்படி, தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடு நிலைப் பள்ளியில் என் பள்ளி,என் பெருமை என்கிற தலைப் பிலான ஓவியம், கவிதை,கட்டுரை போட்டிகளில் பல மாணவர்கள் பங்கேற்றனர். வீடியோவாக பேசி ரீல்ஸ்ம் எடுத்து அனுப்பபப்பட்டது.

என் பள்ளி என் பார்வையில், நான் என் பள்ளியின் பேச்சாளன்,என் பள்ளி என் கலை ,என் கதை என் எழுத்தில் என்கிற தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்ட தகவல்களில் மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் முத்துலெட்சுமி,சிந்து ஆகியோர் செய்து இருந்தனர்.

## ஆட்சிக்கு வந்து 50 மாதங்கள் ஆகியும் மதுரை மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் என்ன செய்தார்?
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கேள்வி

**மதுரை, ஜூலை 20-**

முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த 50 மாதங்கள் ஆகிவிட்டது. ஆனால் மதுரை மக்களுக்கு என்ன செய்தார்? என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ.கேள்வி எழுப்பியுள்ளார்.



மதுரை மாநகர் மேற்கு 2-ம் பகுதி 79-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் கிழக்கு வட்டச் செயலாளர் ஏ.மணிகண்டன் தலைமையிலும், பகுதி செயலாளர் ஏ.தங்க பாண்டி முன்னிலையிலும் ராமையா தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜு எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், சக்தி விநாயகர் பாண்டியன், வக்கீல் தமிழ்செல்வம், ஒட்டுரணி திருமுருகன், வி.பி.ஆர். செல்வகுமார்,விநாயகமூர்த்தி, திடீர்நகர் பாலா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் தெற்கு 5-ம் பகுதி 85-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் கவுன்சிலர் முத்துமாரிஜெயக்குமார் தலைமையிலும், வட்ட செயலாளர்கள் ஆர்.முருகன், ஜெயக்குமார் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் ஜோசப்தனிஸ்லாஸ் முன்னிலையிலும் தவுட்டு சந்தை பழைய மகாளிபட்டி ரோட்டில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார்.

இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், எஸ்.எஸ்.சரவணன், பேராசிரியர் ஜெயபால், ஒட்டுரணி திருமுருகன், வி.பி.ஆர்.செல்வகுமார், கறிக்கடை கிருஷ்ணன், எம். எஸ்.செந்தில்குமார், கே.கலைச்செல்வம், முக்கூரான், ராணிநல்லுச்சாமி, செல்வகுமரன், முனியாண்டி, சதீஸ், சந்திரபிரகாஷ், பால்பாண்டி, கூல்முருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மதுரை மாநகர மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-கடந்த 10 ஆண்டுகால அம்மாவின் ஆட்சியில் மதுரை மக்களுக்கு திட்டங்களை அள்ளி அள்ளி வழங்கினோம் குறிப்பாக எடப்பாடியார் கடந்த நான்கரை ஆண்டுகளில் மதுரை மாநகராட்சி வளர்ச்சிக்காக ஆயிரம் கோடியில் ஸ்மார்ட் திட்டம், ஆயிரம் கோடியில் பறக்கும் பாலம், காளவாசல் அருகே 60 கோடியில் பாலம், மதுரை வைகை அணையில் நான்கு தடுப்பணைகள், வைகை கரை ஓரங்களில் 300 கோடி அளவில் சாலைகள் அதே போன்று குடிமராமத்து செய்து மாடக்குளம் போன்ற பல்வேறு கண்மாய்களில் நீர் ஆதாரத்தை பெருக்கினார்.மேலும் மதுரை மக்களின் குடிநீர் சேவையை பூர்த்தி செய்ய 1292 கோடியில் குடிநீர் திட்ட பணியை கொண்டு வந்தார். ஏறத்தாழ கடந்த பத்தாண்டு கால அம்மாவின் ஆட்சியில் பத்தாயிரம் கோடிகளில் திட்டங்களை நாங்கள் செய்தோம்.

இன்றைக்கு ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த 50 மாதங்கள் ஆகிவிட்டது. மதுரை மக்களுக்கு என்ன செய்தார்? தனது தந்தையார் பெயரில் ஒரு நூலகமும், யாரும் கேட்காத ஒரு ஜல்லிக்கட்டு அரங்கத்தை செய்தார் இதனால் மக்களுக்கு எந்த பயனும் இல்லை.

மதுரைக்கு எதையும் செய்யாமல் ரோடு ஷோ நடத்தி மக்களை ஏமாற்றுவது ஒருபோதும் நடக்காது. குறிப்பாக மதுரை நகர் பகுதிகளில் வீட்டுமனை பட்டா வழங்க கடந்த 2021 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் அரசாணை வெளியிட்டார்.

ஆனால் அந்த பட்டாவை கூட வழங்க மறுக்கிறது ஸ்டாலின் அரசு. இவ்வாறு அவர் பேசினார்.

## மேலூர் தும்பைபட்டியில்
## அ.தி.மு.க. சார்பில் திண்ணைப் பிரச்சாரம்: பெரியபுள்ளான் எம்.எல்.ஏ. பங்கேற்பு



**மேலூர், ஜூலை 20-**

மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை சார்பில் மாபெரும் திண்ணைப் பிரச்சாரம் தும்பைப்பட்டியில் நடைபெற்றது.

கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் பி.வெற்றிச்செழியன் தலைமை தாங்கினார். மேலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும்,மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளருமான பி.பெரியபுள்ளான் (எ)செல்வம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ கே.தமிழரசன் ஆகியோர் தலைமை தாங்கி துண்டு பிரசுரங்களை பொது மக்களிடம் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் புறநகர் மாவட்ட அவை தலைவர் எஸ்.என்.ராஜேந்திரன், மேலூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் கே.பொன்னுச்சாமி, கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் யூனியன் வைஸ் சேர்மன் குலோத்துங்கன், மேலூர் வடக்கு ஒன்றிய கழகசெயலாளர் கே. சி.பொன் ராஜேந்திரன், கழக பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். நிகழ்ச்சியில் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் சேக்கிபட்டி சாகுல் ஹமீது, மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுனர் அணி செயலாளர் அன்புச்செல்வன், கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் துணைச் செயலாளர்கள் அட்டபட்டி முத்தலிபு, ஆசைதம்பி, மாவட்ட பிரதிநிதி முருகன், இலக்கிய அணி செயலாளர் பழனித்துரை, இளைஞரணி செயலாளர் சந்திரன், அம்மா பேரவை செயலாளர் மனோகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் திருமேனி, அண்ணா தொழிற்சங்க செயலாளர் நடேசன், பாசறை செயலாளர் கார்த்தி, ஐடிவிங் தலைவர் முனியாண்டி, நகர்மன்ற உறுப்பினர் திவாகர், மற்றும் , சுரேஷ், வீரபாண்டி, மச்சராஜா, உதயகுமார், கருணாநிதி, அரிசி கண்ணன், சீமான், சுந்தர்ராஜன், ஜெயபாண்டி, தெய்வநாயகம், குணாநிதி, கிளை கழக செயலாளர்கள் ரவிச்சந்தின், பன்னீர்செல்வம், அழகேசன், சோமசுந்தரம், கருப்பையா, தேவராஜ், காஜா மைதீன் பாண்டி, அய்யாவு, சுப்ரமணியன், கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



**மதுரை மாநகராட்சி பைக்காரா நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்நேக்கு சிறப்பு மருத்துவ சேவையை மேயர் இந்திராணி தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு பரிசோதனை மேற்கொள்வதை பார்வையிட்டார். உடன் துணை மேயர் நாகராஜன், நகர் நல அலுவலர் இந்திரா, மாமன்ற உறுப்பினர் கருப்பசாமி மற்றும் மாநகாராட்சி அலுவலர்கள் உள்ளனர்.**



சென்னை கோபாலபுரம் இல்லத்தில், வயது மூப்பின் காரணமாக காலமான முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்துவின் உடலுக்கு நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மலர்மாலை வைத்து அஞ்சலி லெுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனை நேற்று மொரிஷியஸ் நாட்டின் இளைஞர் (ம) விளையாட்டுத்துறை அமைச்சர் தர்மராஜன் நாகலிங்கம் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நேற்று நடைபெற்ற அனைத்து கல்லூரி மாணவ-மாணவியர்களிடையே பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகையினை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், சா.மு.நாசர் ஆகியோர் வழங்கினர். இதில் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண், துணைத்தலைவர் இறையன்பன் குத்தூஸ், ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஹாஜாகனி, முதன்மைச்செயலாளர் சா.விஜயராஜ்குமார், உறுப்பினர் செயலர் மு.ஆசியா மரியம் உள்ளனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்எ ம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025-2026 செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், வேளாண் விற்பனை த்துறை ஆணையர் த.ஆபிரகாம், சர்க்கரைத்துறை இயக்குநர் த.அன்பழகன், தலைமை பொறியாளர் ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டத்தில் நேற்று 2-வது நாளாக தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்ட அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி நாகப்பட்டினம் அவுரி திடலில் பல்லாயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார்.

# வேளாங்கண்ணி பேராலயத்தில் இ.பி.எஸ். சிறப்பு பிரார்த்தனை

நாகை,ஜூலை20-

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் எடப்பாடி பழனிசாமி மெழுகுவர்த்தி ஏற்றி சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களில் ''மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்" என்ற பெயரில் முன்னாள் முதல்வரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், நாகை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (ஜூலை 18) இரவு வருகை தந்த அவர், கீழ்வேளூர் சட்டப்பேரவைத் தொகுதியில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து, 2-வது நாளாக நேற்று (ஜூலை 19) வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

அங்கு பேராலயம் சார்பில் இருதயராஜ் தலைமையிலான பங்குத்தந்தையர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர். வேளாங்கண்ணி பேராலயம் சார்பில் மாதா உருவப்படம் எதிர்கட்சி தலைவர் பழனிசாமிக்கு வழங்கப்பட்டது.

இதையடுத்து, செருதூர் கிராமத்திற்கு சென்று மீனவ மக்களின் கோரிக்கைகளையும், குறைகளையும் கேட்டு அறிந்தார்.

தொடர்ந்து நம்பியார் நகர் மீன்பிடித் துறைமுகத்திற்குச் சென்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பார்வையிட்டார். அப்போது அங்குத் திரண்டு இருந்த மீனவர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது, மீனவர்கள் மத்தியில் பேசிய எடப்பாடி பழனிச்சாமி, அ.தி.மு.க. ஆட்சியில் நம்பியார் நகர் மீனவக் கிராமத்தில் அரசின் பங்களிப்பாக 24 கோடியும் மக்களின் பங்களிப்பாக 11 கோடி என 35 கோடி ரூபாயில் சிறு துறைமுகம் அமைக்கப்பட்டது. மீனவர்களின் அனைத்து கோரிக்கைகளும் ஏற்று, அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.'' என அவர் பேசியுள்ளார்.

# குற்றால அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு



தென்காசி, ஜூலை 20-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் காலம் என்பதால் அனைத்து அருவிகளிலும் சீராக தண்ணீர் விழுந்து வந்தது. இந்த நிலையில் தென்காசி மற்றும் குற்றாலம் சுற்று வட்டார பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக நேற்று அதிகாலை குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

மெயின் அருவியில் பாதுகாப்பு வளைவு தெரியாத அளவிற்கு ஆர்ப்பரித்து வெள்ளம் கொட்டியது. ஐந்தருவியில் ஐந்து கிளைகளிலும், பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் நின்று குளிக்கும் தடுப்புக் கம்பிகள் வரையில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்ததால் பாதுகாப்பு கருதி குற்றாலம் மெயின் அருவி, பழைய குற்றாலம் மற்றும் ஐந்தருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாளான நேற்று குற்றால அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.



மதுரை மாநகர் மேற்கு 2-ம் பகுதி 79-வது வார்டு அ.தி.மு.க. சார்பில் கிழக்கு வட்டச்செயலாளர் ஏ.மணிகண்டன் தலைமையிலும், பகுதி செயலாளர் ஏ.தங்கபாண்டி முன்னிலையிலும் ராமையா தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், சக்திவிநாயகர் பாண்டியன், வக்கீல் தமிழ்செல்வம், ஓட்டுரணி திருமுருகன், வி.பி.ஆர்.செல்வகுமார், விநாயகமூர்த்தி, திடீர்நகர் பாலா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.